# திராவிடநாடு

31—3—63 | வார வெளியீடு | விலை 16 காசு


## திருந்திக்கொள்

—[ ந. பொ. கிருட்டினன் ]—

போர்த்தொழிலே வெறித்தொழிலாய்க் கொண்ட சீனன்
    போக்கெல்லாம் தீக்கட்டை யான தாலே
பார்த்தழுதாள் இமயத்தாய் பகையோன் செய்யும்
    பண்பில்லா வன்செயலின் கொடுமைக் கூற்றை
ஆர்த்தெழுந்தால் அடக்கவந்த 'காந்தியண்ணல்'
    அகிம்சை, அறம், தூய்மையென்ற இனிமைச்
        சொல்லால்
போர்த்துவிட்டார் பெரும்போர்வை, அதனுல் நாமும்
    பொறுத்திருந்தோம், கருத்திழந்தான்-புகுந்தான் சீனன்

அழைப்பின்றி இளைப்பாற வந்த சீனு!
    அறிவிலையோ? நீயும் ஓர் மனிதன் தானே!
நுழைந்திட்டாய், நுழைந்த இடம் எமக்குச் சொந்தம்
    கோடிமுறை கூறிவிட்டோம், வேண்டாம் செல்வாய்
பிழைசெய்தாய் மனஏட்டில் கறையைக் கண்டாய்
    பித்தனென்றும், எத்தனென்றும் யிகழ்ந்(து) உன்னைக்
கடைந்தெடுத்தார் மத்தாலே! கயவ னென்றே
    காரி உமிழ்ந்தார்கள் கடைத்தேறச் செல்வாய்!
        உய்வாய்!

# தியாகம்

—[ ப. கதிரவன் ]—

அன்புள்ள மாசிலாமணி!

துயரத்தின் எல்லையில் நின்று இத்தக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன். படித்தவுடன் கிழித்தெறியும் கடிதமல்ல இது. என் நெஞ்சத்து எண்ணங்களை நீ நிறைவேற்ற நான் விடுக்கும் வேண்டுகோள்: நான் கூறுகிறபடி செய்வாய்—உன்னால் முடியும் என்ற நம்பிக்கையிலேயே துணிந்து இதனை எழுதுகிறேன்.

இதயமில்லா இழிதகைச் சீனர் இணையற்ற இப்பொன்னாட்டின்மீது போர் தொடுத்ததைப் பாரறியும். காதலித்த "கண்மணியை" என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்ற மறுநாளே போர்முனை நோக்கிச் செல்லவேண்டியதாயிற்று என்பது உனக்குத் தெரியாததல்ல. "முன்னாள் இராணுவத்தினன்" என்ற முறையில் அரசின் அவசர அழைப்பை ஏற்று உடன் புறப்பட்டுச் செல்லும்பொழுது பலர் பலவித கோணங்களில் என்னை விமர்சித்தது இன்னும் என் நினைவிலிருந்து நீங்கவில்லை.

"ஐயோ, பாவம். கல்யாணம் முடிஞ்ச மறுநாளே கோயில் குளத்துக்குக்கூடப் போகாமே பட்டாளத்துக்குப் புறப்பட்டுட்டானே, ஊ...ம்... இப்ப எல்லாமே தலைகீழாத்தான் நடக்குது" பெரியவர்கள் சிலர் இப்படிப் பேசினர்.

"கொடுத்து வைக்காதவன்; வாழ்க்கை இன்பத்தை அனுபவிக்க ஆரம்பிக்குமுன்பே போர்க் கொடுமையை அனுபவிக்கப் பயணம் பண்ணிவிட்டான்" இப்படிச் சில நடுத்தர வயதினர் கருத்துரைகள் வழங்கினர்.

"நாடு காக்கும் நற்பணிக்கு ஓடுகின்ற உத்தமனே, நீ நீடு வாழ்க" பல இலட்சிய இளம் உள்ளங்கள் வாழ்த்துப் பா பாடின.

புலம்பித் தவித்தது பெற்றோர் நெஞ்சம். "புது மனைவி" கண்ணீரைக் காணிக்கையாகத் தந்து விடை கொடுத்தாள்.

'வீடு' நினைவிலிருந்து விடுபட்டது. 'நாடு' மனக்கண் முன் நின்றது. நெஞ்சிலுறை வஞ்சியுடன் பஞ்சணையில் இருக்கவேண்டிய நான் வஞ்சகச் சீனனின் நஞ்சொத்த செய்கையால் வெஞ்சமர்க் களத்தில் நிற்கவேண்டிய நிலையை எண்ணினேன். ஆரணங்கை அணைக்க வேண்டிய கரங்களிலே ஆயுதங்களை ஏந்த வேண்டியதாயிற்று. உலகையே மறந்து இருக்கவேண்டிய நேரத்தில் உலகையே எண்ணி இருக்கவேண்டியதாயிற்று.

நண்பா! எதிர்பாராது ஏற்படுகின்ற சம்பவங்கள் எப்படி எப்படியெல்லாம் மனிதனை மாற்றிவிடுவிடுகின்றன; பார்த்தாயா? உலகத்தின் போக்கே விசித்திரமானது.

சீனர்கள் சிறுகச் சிறுக முன்னேறிக் கொண்டிருந்தனர். இரு தரப்பிலும் பல உயிர்கள் பலியாயின. அடுத்த நாள் நான் இருந்த "அணி" முன்னால் சென்று போரிடவேண்டும். அணித் தலைவர் சென்று போரிடவேண்டிய முறை பற்றி முன்பே விளக்கமாகக் கூறியிருந்தார். அந்த அணியிலே என்னோடு நான்கைந்து தமிழர்களும் இருந்தனர்.

அன்றிரவு எங்களுக்கு உறக்கமே வரவில்லை. நாளைய சண்டையிலே நாட்டம் இருந்தது. அன்றைய செய்தித் தாளில் தலைவர்களின்—குறிப்பாகத் தமிழகத்துத் தலைவர்களின் வானொலிப் பேச்சுக்களை வெளியிட்டிருந்தனர். அவைகளைப் படிக்கப் படிக்க எங்கள் உள்ளங்களில் உரம் ஏறியது — உணர்ச்சி கொந்தளித்தது—உறுதி குடிகொண்டது.

பகலவன் உலகின் போக்குக் கண்டு சிரித்தவண்ணம் உலவ ஆரம்பித்தான். குளிரின் கடுமை சிறிது குறைய ஆரம்பித்தது. மலைப் பிரதேசம் மயானமாகக் கண்முன் காட்சியளித்தது. சீனனின் தலையைப்போல் அவ்விடம் சூனியமாகத் தெரிந்தது. அங்கே கம்பீரமாகக் காட்சி அளித்த கற்பாறைகள் "எங்களுக்கும் சீனர்களின் நெஞ்சங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு" என்பதைச் சொல்லாமல் சொல்வதுபோல் அசைவற்று நின்றன.

"டுமீல்.....டுமீல்.....டுமீல்!" திடீரென்று துப்பாக்கிச் சத்தம் எதிரொலித்தது. சூழ்ந்த புகை மண்டலம் எங்கள் பார்வையை மறைத்துவிட்டது. செய்வதறியாது திகைத்து நிற்கையில், பின்னாலிருந்து மீண்டும் வெடிச் சத்தம் பயங்கரமாகக் கேட்டது. அவ்வளவுதான் அடுத்த வினாடியே 'ஐயோ' என்ற அலறலுடன் மண் மாதாவின் மடியில் சாய்ந்தேன்.

திடீரென்று விழித்து எழுந்த என்னை என்னாலேயே உணரமுடியவில்லை. மருத்துவமனையில்தான் இருக்கிறேன் என்பதை உணர்வதற்கே நீண்ட நேரம் பிடித்தது. எதையோ ஒன்றை இழந்ததுபோல ஒரு பிரமை — அடக்க முடியாமல் அர்த்தமில்லாமல் அலறிவிட்டேனும். இராணுவ டாக்டர் என்னை மீண்டும் பரிசோதித்தார். இலேசான மயக்கத்துடன் அசைவின்றிக் கட்டிலில் கிடந்தேன்.

மாசிலாமணி! மனந்திறந்து கூறுகிறேன்—மனம் இரங்குவாயென்று. டாக்டர் கூறிய சொற்கள் என் இதயத்தை ஈட்டிகொண்டு தாக்கியதுபோல் இருந்தது. "படக்கூடாத இடத்திலே குண்டு பட்டுவிட்டபடியால் இனிமேல் பிழைப்பதே அரிது.

அப்படிப் பிழைத்தாலும் மனைவியுடன் குடும்ப வாழ்வு நடத்த முடியாது. 'தாம்பத்ய உறவு' நிகழுமேயானால், அடுத்த வினாடியே மரணம் தப்பாது" டாக்டர் கூறி முடிப்பதற்குள் ஓசையின்றி என் இதயம் அழுதது—இரத்தக் கண்ணீர் சிந்தியது.

(16-ம் பக்கம் பார்க்க)

# தடுத்தாக வேண்டும்

21 ] ஆண்டு சந்தா ரூ. 8 (31—3—1963) தனிப்பிரதி 16-காசு [ இதழ் 31.

## நெருக்கடி நிலை தீர்ந்தது! இனிப் பயமில்லை

என்று

## யாராவது கூறுவரேல் அவர்கள் ஏமாந்தவர்கள் என்று பொருள்

ஏனென்றால்,

சீனரின் படைக் குவிப்பு நாளும் அதிகரித்த வண்ணமுள்ளது.

திபெத்தில்

பகுதி பகுதியாக இராணுவம் குவிக்கப்படுகிறது.

மண்ணில் இருந்தும் விண்ணில் இருந்தும் ஏவும் கணைகள்

ஏராளமாகக் குவிந்தவண்ணம் உள்ளன.

எனவே

நெருக்கடி நிலை குறைந்துவிட்டது!

என்று

கூறுவது நமக்கு நாமே ஆபத்தைத் தேடிக்கொள்வதாகும்.

திபெத்தில் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரம் தீவிரமாக நடைபெறுகிறது.

இது

அரசியல் நிபுணர்கள் கண்டுவரும் உண்மை.

ஆகையால்

நாம் அயர்ந்திருக்கக் கூடாது.

அற்பன்

சீனனை அடியெடுக்கவிடாமல் தடுத்தாகவேண்டும்.

தற்காப்பின் அவசியத்தை உணரவேண்டும்.

வெற்றி நமதே.

# உண்மை வெல்லும்

வேலய்யன் சாலையில் நடந்துகொண்டிருந்தான். அனல் வீசிக்கொண்டிருந்தது வெயில். தனது முழுப் பலத்தையும்—காண்பிப்பதுபோல் கதிரவன் தன்வெப்பமான கிரணங்களைப் பொழிந்துகொண்டிருந்தான். இந்த வெயிலில், வேலய்யன் நிதானமாகவும் அமைதியாகவும் நடந்துகொண்ருந்தான். இன்னும் இரண்டுகல்தொலைவு இருக்கின்றது ஊர்தி ஏறும் சாலையை அடைந்திட. அவன் மனத்தில் வாழ்வில் நடந்த சில நிகழ்ச்சிகள் வெயிலைப்போல எரிந்துகொண்டிருந்தன. பெருமூச்சு விட்டுக்கொண்டும், சிற்சில வேளைகளில் விழிகளில் வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண் ஏதோ தனக்குத்தானே கூறிக்கொண்டும் நடந்துகொண்டேயிருந்தான்.

✿

நல்ல குடும்பத்தில் பிறந்த வேலய்யன் பயிற்சி பெருத ஆசிரியனைப் பணியாற்றிவந்தான். வேலை கிடைக்காத இக்காலத்தில் பத்தாவது படிப்புத் தேறியிருந்த அவன், வீட்டுக்குச் சுமையாக இருக்க விரும்பாமல், கிடைத்த இந்த வேலையில் அமர்ந்தான். ஆசிரியர் வேலை, தாய் தந்தையை இழந்துவிட்டிருந்த அவனுக்கு ஒருவகையில் அமைதி வாழ்வைத் தந்தது என்றுகூடக் கூறலாம். அவன் பணியாற்றிய ஊர் ஒரு சிறு கிராமம், சிற்றூர் என்ருலும் வளம் பொருந்தியது. தோப்புகளும், பச்சையாக நின்று குளிர்ந்த காட்சியை நல்கும் வயல்களும், ஊருக்கருகே ஓடுகின்ற சிற்ருேடையும் அவ்வூருக்கு அழகைக் கூட்டி நின்றன.

அந்த ஊருக்கு வேலய்யன் ஆசிரியர் வேலைக்குவந்து இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. இந்த இரண்டாண்டுகளில் அந்தச் சிற்றூரின் வளர்ச்சியில் வேலய்யன் எடுத்துக்கொண்ட முயற்சியும் உழைப்பும் மிக அதிகம். அந்த ஊரில் பத்துப் பன்னிரெண்டுபேரே எட்டாவது வகுப்பு முடித்துவிட்டுப் பயிர் வேலையை மேற்கொண்டனர். ஊர்தி ஏறவேண்டுமென்ருல் இரண்டுகல் தொலைவு நடந்தால்தான் சாலைக்கு வரமுடியும். படித்தவர்களைப் பார்த்து, ‘கிராமங்கட்குச் செல்லுங்கள்’ — என்று கூறிய மகாத்மா காந்தியின் உரை எவ்வளவு உண்மை வாய்ந்தது என்பது இவ்வூரைப் பார்த்தபின் அவன் உணர்ந்துகொண்டான். நாட்டின் முன்னேற்றம் கிராமங்களில்தான் உள்ளது என்பது உண்மையே.

**மதிஒளி**

அந்தச் சிறு கிராமத்தில் மக்கள் மேற்கொண்டிருந்த வாழ்க்கை வேலய்யனுக்கு இரக்கத்தை உண்டு பண்ணியது. மற்ற ஊர்களில் அது இல்லையே; இது இன்னும் வரவில்லையே என்றெல்லாம் தங்கள் தங்கள் ஊரின் வளர்ச்சிக்கு அரசாங்கம் செய்துவருகின்ற முன்னேற்றப் பணிகளையும், வசதிகளையும் பயன்படுத்திக்கொள்வதில் முந்திக்கொண்டு நிற்கின்ற வேளையில், இந்த ஊரில் மக்கள் அனைவரும் ஒன்றைப்பற்றியும் கவலையுருமல் இருப்பதைக்கண்டு, குறைகள் பலப்பல இருப்பினும், தேவைகள் அதிகமாக இருக்க, அவற்றையெல்லாம் உணராது, நிறையுடைய வாழ்வினை நுகர்பவர்போல் அமைதியாக வாழ்ந்து வந்த நிலையினைக்கண்டு வேலய்யன் வியப்புக்கொண்டான். காலையில் கோழிகூவுமுன் எழுந்து தங்கட்குரிய வயல்கட்குச் சென்று உழைப்பதும், மாலை வீடுதிரும்பி, இருப்பதைச் சமைத்து உண்டு உறக்கத்தில் ஆழ்வதும் ஆகிய இவ்வாழ்வில் கலையுணர்வு அழகாக இருப்பதை வேலய்யன் கண்டு அமைதியாக அதை எண்ணத்தில் அசைபோட்டான்.

மருத்துவம் பார்ப்பதற்குத் தனி மருத்துவ விடுதியில்லை. படிப்பதற்குப் பள்ளியில்லை. வேலய்யன் முதன்முதலில் சென்று அரசாங்கத்தின் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்த் திறந்த ஓராசிரியர் பள்ளிதான் அவ்வூருக்கு முதற் பள்ளிக்கூடம். குடிதண்ணீர்க் குழாயில்லை. இரவில்தெருவிளக்கு இல்லை. குறுகிய மனப்பான்மையுடையவனிடம் அறியாமை மூடியிருப்பதைப்போல, இரவில் அச்சிற்றூரை இருள் தன்னுள் அடக்கிக்கொள்ளும். ஊருக்கு வெளியே நடக்கின்ற உலகச் செய்திகளை அறிந்துகொள்ள யாதொரு வாய்ப்புமில்லை. இன்னும் பற்பல வகைகளில் தேவைகளை வேண்டி நின்றது அந்த ஊர், எனினும் மக்கள் அவற்றையெல்லாம் உணர்ந்து வாழ்ந்ததாகத் தெரியவில்லை.

நகரத்திலிருந்துவந்த வேலய்யனுக்கு இப்படிப்பட்ட சிற்றூரைக் கண்டதும், சமுகச் சேவையுள்ளம் கொண்ட அவனுக்கு நிறைய வேலையிருப்பதாகக் கருதினுன். தனது சிறுவயது முதற்கொண்டு எண்ணிவந்த சமுகத்தொண்டு’ உணர்ச்சிக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவே இயற்கை இந்த

( 13-ம் பக்கம் பார்க்க )

# "தலையாரி தங்கப்பன்"

தலையாரி தங்கப்பன் என்றுமில்லாதபடி அன்று நேரத்தோடு தன் வீட்டிற்கு வந்தான். தங்கப்பனது வரவு அவன் மனைவிக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ஆனால், அவனது சோர்ந்த முகத்தைக் கண்டவுடன், அவளுக்கு ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

தங்கப்பன் அவன் மனைவியுடன் பேசாமலும், அவள் உடம்பைப்பற்றி விசாரிக்காமலும் இருந்தான். அவன் அன்று நடந்ததைப்பற்றியே நினைத்து நினைத்துக் குமுறியவண்ணம் இருந்தான். அவனது மனக் குமுறல் கண்ணீராய்ப் பெருகி அவன் கன்னத்தை நனைத்தது. அது கண்டு அவன் மனைவி அதிர்ச்சியடைந்து அவனைக் கேட்டாள்.

"ஏன் அத்தான்! என்றுமில்லாமல் அழுகிறீர்கள். என்ன ஆபத்து வந்துவிட்டது? சொல்லுங்கள்"

"அழாமல் என்ன செய்யச் சொல்கிறாய்? நான்பார்க்கும் உத்தியோகம் அப்படியிருக்கு."

"உத்தியோகத்துக்கு என்னத்தான்! புதுப்பட்டாமணியார் ஏதாவது பேசினாரா?"

"அவரைப்பத்தி என்ன? அவர் உத்தியோகம்தான் இப்படி என்னை ஆட்டு ஆட்டுனு ஆட்டி வைக்குது. அவர் சாதாரண காலத்திலேயே கடூரமானவர். அடுத்துக் கெடுப்பதிலே அவருக்குச் சமம் அவர் தானே!"

"என்ன அத்தான்! நடந்ததைச் சொல்லுங்களேன்"

"நீ நிறைமாதக் கர்ப்பிணியாகக் கஷ்டப்படுகிறாய். உனக்கு என்னால் உதவி செய்ய முடியவில்லையே"

"நான்தான் உங்களுக்கு உதவி பண்ணணுமேயொழிய, நீங்க ஏன் உதவி பண்ணணும்"

"அப்படியல்ல! முடியாத காலத்திலே உனக்கு உதவ முடியவில்லை. ஆனால், வேலை செய்யத் தெம்பு உள்ளவர்கட்கு செய்யாத வேலையைச் செய்ய வேண்டியிருக்கு"

"என்ன அத்தான் நடந்தது? ஏன் சுத்தி வளைக்கிறீங்க! நேராக நடந்ததைச் சொல்லுங்களேன்"

"பட்டாமணியார் சொல்லும் எந்த வேலையானாலும் நான் இதுவரையிலும் செய்யாமலில்லை. ஆனால், அவர் இன்று சொன்ன வேலையைச் செய்ய என் மனம் இடம் தரவில்லை. என்றுமில்லாதபடி இன்று அவருடைய அழுக்கு வேட்டிகளையும் சட்டைகளையும் துவைக்கச் சொன்னார். அதை எப்படிச் செய்யமுடியும்? என் மனம் இடந்தரவில்லை. உன்னைப்பற்றிய நினைவு வந்தது. நீ நிறைமாதக் கர்ப்பிணியாக......எழுந்துகூட நடக்க முடியாமலும், சேலை துவைத்துக் குளிக்க முடியாமலும் இருக்கிறாயே! வென்னீர்கூடப் போட்டுக் குளிக்க முடியாமல் தவிக்கிறாயே! உனக்கு உதவிசெய்ய முடியாமல் இவருக்கா செய்வது என்று என் மனம் உறுத்தியது.

"என்னங்க இதெல்லாம்! உங்க வேட்டியைத் துவைப்பது சரியா? சர்க்கார் வேலையைச் சொல்லுங்க ......சரியாச் செய்யலைன்னு கேளுங்க?" என்றேன்.

**ச. கனகராசன்**

'இதெல்லாம் தான் செய்யணும். சர்க்கார் வேலையை மட்டும் தான் செய்யலாம்னு நினைச்சியா? தலையாரின்னா பட்டாமணியாருக்கு என்ன செய்யணுமோ அதெல்லாம் தான் செய்யணும்......என்ன ஒன்றும் தெரியாத மாதிரி கேட்கிறியே!' என்றார். ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டேன்.

"அதற்கேன் அழுகிறீர்கள்"

"அவர் மிகவும் பொல்லாதவர். அவர் சொல்லிச் செய்யாததால் என்ன செய்துவிடுகிறாரோ என்று தான், நான் வீட்டுக்கு வரும்போது சொன்னார், 'உன் சீட்டைக் கிழிக்கிறேனா இல்லையா பார்' என்றார். நீ இப்படி நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கும்போது வேலை போய்விட்டால் நான் எப்படி உன்னைக் காப்பாற்றுவேன் சொல்லு."

"நம் குடும்பம் இப்படி இருப்பது தெரிந்தும் அவர் ஒன்றும் அப்படிச் செய்யமாட்டார். அப்படியேதான் அவர் செய்தாலும் நாம்தான் என்ன செய்யமுடியும்? நடக்கிறது நடக்கட்டும். இதுக்காக ஏன் கவலைப் படுறீங்க"

அன்று இரவு தங்கப்பன் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. நடந்ததை நினைத்து நினைத்து ஏங்கினான். மறுநாள் காலையில் அவன் மனைவிக்கு உடம்பு சரியில்லை. தலைப் பிரசவமானதால் அவள் நிலை எப்படி ஆகுமோ என்று கலங்கினான். நேற்று நடந்ததை நினைத்தால் பட்டாமணியாரும் பணம் கொடுக்க மாட்டாரே என்று எண்ணினான். இருந்தாலும் வேறு யாரிடமும் வாங்கமுடியாது என்ற காரணத்தால் அவரிடம் கொஞ்சம் பணம் வாங்கி வரலாம் என்று புறப்பட்டுச் சென்றான்.

பட்டாமணியார், தான் சொல்லிச் செய்யாமல் போன தங்கப்பனை என்ன குற்றம் சொல்லி விலக்குவது என்று சிந்தித்தார். அவர் நினைத்து எதையும் செய்யாமல் இருந்ததில்லை. ஆகையால் அன்று இரவே அதற்கான திட்டத்தைத் தீட்டி முடித்தார்.

மறுநாள் காலை தலையாரி தங்கப்பன் வரவைப் பெரிதாக எண்ணி எதிர்பார்த்துக்கொண்டிருந்த பட்டாமணியார் தன் வீட்டின் வராந்தாவில் அங்குமிங்குமாக நடந்தார். மனம் சரியில்லாமல் இருந்தால் இப்படி நடப்பது வழக்கம். அக்காரியத்தை முடித்த பின்னரே ஓரிடத்தில் அமர்வார்...அதுவரை சரியான நிலையில் இருக்கமாட்டார்.

"தலையாரி தங்கப்பன் இன்னும் வரவில்லையா?"

"அதோ இப்பதான் வர்ராங்க" என்றான் வேலைக்காரன். தலையாரி தங்கப்பன் தளர்ந்த நடையுடன் வந்து பட்டாமணியாரின் முன்னால் நின்றான்.

"தங்கப்பா ஏன் இவ்வளவு நேரம் கழித்து வருகிறாய்? இன்றோடு வசூலெல்லாம் முடித்துவிடணுங்கிறது தெரியுமா தெரியாதா?"

"தெரியுங்க......என் மனைவிக்கு உடம்பு சரியில்லைங்க ...... தலைப் பிரசவமிங்கிறதாலே ரொம்பக் கஷ்டப்படுறாளுங்க ...... அதனாலே வர முடியலைங்க......"

"பிரசவமின்னா என்ன நீயா பார்க்கிறே? வசூலெல்லாம் எப்படியும் இன்னைக்குள்ளேயேமுடிக்கனும்ன்னு முன்னாலேயே உத்தரவு வந்திருக்கு, நீ என்னடான்னா ...... வீட்டிலேயே படுத்திருக்கியே?"

"இன்று மட்டும் லீவு கொடுங்க... நாளைக்கு வந்துடறேன். கொஞ்சம் பணம் வேண்டுங்க...பிரசவத்திற்கு மருந்து வாங்கப் பணமில்லைங்க..."

"என்னிடத்திலே பணமுமில்லே ஒண்ணுமில்லே......என்னிடத்திலே கேட்காதே...... என் னி ட த் தி லே கொடுத்து வைத்ததுமாதிரி கேட்கிறீயே"

"உங்களிடத்திலில்லாமல் வேறு யாரிடத்திலிங்க கேட்கச் சொல்றீங்க......எப்படியாவது பார்த்துக் கொடுங்க"

"அதை எல்லாம் முன்னாலேயே வேணும் வேணுங்கிறதை யோசிக்கணும். இப்ப வயிற்றுவலி வந்த வுடனே பட்டாமணியார் ஐயா வேன்னு குழையிறீயே.........நான் சொன்னவேலையைச் செ ய் யா த உனக்கு எப்படியப்பா தரமுடியும்"

"சம்பளம் வந்தவுடனேயே எடுத்துக்கொள்ளுங்க"

"மகா சம்பளம் வருதுபாரு சம்பளம். இருபத்திரண்டு ரூபா காசு வருது. அதிலே மு ன் னா லே யே வேறு வாங்கியிருக்கே. அப்படி யிருக்கும்போது எப்படிக்கொடுக்க முடியும்."

"இல்லைங்க எஜமான் எப்படியாவது பார்த்துக்கொடுங்க; டாக்டருக்கு கொடுக்கணுங்க..."

"அதெல்லாம் முடியாது. பட்டாதாரர்கள் கொடுக்கவேண்டிய பாக்கியையெல்லாம் வாங்கிட்டுவா"

"வீட்டிலே பிரசவத்தாலே உயிருக்கே மன்றாடிக்கிட்டுயிருக்கா... நாளைக்கு வாங்கிகிட்டுவர்ரேங்க..."

"முடியாது! எப்படியும் ஒரே ஓட்டமாய் ஓடிப்போய் வாங்கிகிட்டுவந்து கணக்குகளை இன்னைக்கே முடிச்சாகணும். ஓடு உடனே" என்று துரிதப்படுத்தினார், பட்டாமணியார்.

"என் மனைவி கஷ்டப்படுற நேரத்திலே நான் எப்படிங்க இப்ப போக முடியும்"

"இப்போதே போக முடியாவிட் விட்டால், வேலையைவிட்டு விலகிப்போ"

"கஷ்டமெங்கிறது யாருக்குமுள்ளதுதானே! அதுக்காக வேலையை விட்டுடணுமா?"

"இந்த நேரத்திலில்லாத நீ வேலை பார்ப்பதைவிட விலகுவதுதான் நல்லது. என்ன சொல்கிறாய்? வேலை பார்ப்பதாக இருந்தால் ஓடிப்போய்ப் பணத்தை வாங்கிவா, இல்லையென்றால் வேலையைவிட்டு விலகு"

வேறு வழியின்றிப் பாக்கி தர வேண்டிய பட்டாதாரர் வீடுநோக்கி நடையைக் கட்டினான், தலையாரி தங்கப்பன்.

பகல் மணி பன்னிரண்டு இருக்கும். உச்சிவெயிலானதால் தாங்க முடியவில்லை. கீழேயும் சூடு. மேலேயும் வெயிலின் வெப்பம்.

தலைதெறிக்க ஓ டி னா ன்! கால்களும் கோவைப்பழத்தைப்போலச் சிவந்துவிட்டன! பக்கத்தில் நிழல் கூட இல்லை. எப்படியோ சமாளித்துக்கொண்டு பாக்கி தரவேண்டியவர் வீட்டிற்கு சென்றான்.

தலைதெறிக்க ஓடிவந்த தங்கப்பனைக் கண்டவுடன் பாக்கி தர வேண்டிய பட்டாதாரர்க்கு உடலெல்லாம் நடுக்கம் ஏற்பட்டது. பணமிருந்தால்தானே! த லை யா ரி யிடம் ஏதேதோ சொல்லிப்பார்த்தார். தலையாரி தங்கப்பன் கெஞ்சிக் காலில் விழாத அளவுக்கு மன்றாடிக் கொடுக்கவேண்டிய பாக்கி ரூபாயைக் கேட்டான். இ ந் தா ண் டு பெய்த மழையின் காரணமாகப் பயிர்கள் சேதமுற்று நெல்விளையாததால் சோற்றுக்கே திண்டாடினார்கள். வரி வஜா செய்யும்படி எத்தனையோ மனுக்கள் எழுதிப் பார்த்தனர். அ வ ரு ம் மற்றவர்களும். ஆனால் வரி வஜா செய்யவில்லை, கட்டாயமாக வசூலித்ததால் அவர் தான் என்னசெய்வார். கடைசியில் அவர் மனைவியின் கம்மலைக்கழட்டி அடுத்த வீட்டில் அடகுவைத்து விட்டு கொடுக்கவேண்டிய பாக்கியைக் கொடுத்தார்.

வாங்கிய பணத்தோடு திரும்பிப் பட்டாமணியார் வீட்டை நோக்கி ஓடினான். வெயிலின் சூட்டைத் தா ங் க முடியவில்லையென்றாலும், செய்யவேண்டிய வே லை யை ச் செய்து முடிக்கவேண்டியதுதானே! அவன் வாங்கும் இருபத்திரண்டு ரூபாய் சம்பளத்திற்கு வெயிலென்றும மழையென்றும் பாராமல்தானே வேலைபார்க்கவேண்டும்.

தங்கப்பன் பட்டாமணியார் வீட்டிற்குப் போகுமுன்னால் தன்னுடைய மனைவி பிரசவ வேதனையால் எப் படித் துடிக்கிறாளோ என்று கவலைப்பட்டு ஒருமுறை பார்த்துவிட்டுப் போவோமே என்றெண்ணித் தன் வீட்டை நோக்கி ஓடினான்.

தங்கப்பனின் ம னை வி பிரசவ வேதனையால் ச த் த மி ட் டா ள். "ஐயோஅம்மா! தாங்கமுடியலையே" என்று சொ ல் லி ச் சொ ல் லி அழுதாள்.

தங்கப்பன் வீட்டின் முன்னால் நான்கைந்து பெண்களும் ஆண்களும் நின்றுகொண்டிருந்தனர். வெண்ணிற ஆடையணிந்த நர்ஸ் ஒருத்தி அவன் வீட்டில் நுழைவதும் வெளியே வருவதுமாக இருந்தாள்.

பிரசவமாக எவ்வளவு நேரமாகுமென்று நர்ஸைக்கேட்டான். நர்ஸ் "பிரசவமாவதென்றால் ஒரு இன்ஜெக்ஷன் மருந்து இருக்கிறது. அதை இப்போதே வாங்கிவந்து போட்டால் சுகப்பிரசவமாகிவிடும்" என்றாள்.

பணத்துக்கு எங்கே போவான் தங்கப்பன். மடியைப்பிடித்துப்பார்த்தான். சர்க்காருக்குச் சேரவேண்டிய நிலவரிப்பணம் இருந்தது. மறுபடியும் பணத்தைப் பிடித்துப் பார்த்தான்.

'பணமில்லையேயென்று யோசனை செய்யாதே! இந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு போ" என்று மனம் சொல்லியது.

'சர்க்கார் பணமாச்சே! எடுத்தால் கொடுத்துவிட வேறு பணமில்லையே!'

'ஆபத்து நெருங்குகிறது. தாமதிக்காதே! இப்போதே போகாவிட்டால் உன் மனைவி பிழைப்பது அரிது. யார் பணமாய் இருந்தால் என்ன?'

'அப்படியென்றால் பணத்தைக் கையாடியதாகக் குற்றமாகுமே!'

'எதையும் நினைத்துப் பார்த்தாயானால், உன் மனைவி பி ழை ப் ப து அரிது. நடப்பது நடக்கட்டும். ஓடு ...ஓடு...தாமதித்தால் உன்னைவிட்டு உன் மனைவி பிரிய நேரிடும். அவனை மனம் விரட்டியது.

ஓடினான் வேகமாக, மருந்துக் கடை நோக்கி, கடையில் மருந்தை வாங்கிக்கொண்டு திரும்பி ஓடினான் ......கால்கள் தன்னிச்சையாகப் பறந்தன. 'எப்படி ஆ னா ளோ! பிரசவமாகிவிட்டதோ என்னவோ' என்றெல்லாம் எண்ணிக்கொண்டு ஓடினான். தூரத்தில் வரும்போதே அழுகுரல் கேட்டது. வெகு வேகமாக ஓடினான். அழுகுரல் தன் வீட்டிலிருந்துதான் என்பதைத் தெரிந்து ஓடினான். ஆம் அவன் மனைவி

அவனை விட்டுப் பிரிந்துவிட்டாள். மருந்து கொண்டுவந்தும் பயனில்லை.

அழுதான்—இல்லை, வாய்விட்டே கதறியழுதான், அவன் உடலில் பலம் உள்ளவரை சத்தமிட்டு அழுதான்.

பட்டாமணியார் வசூல் பாக்கி வாங்கப்போனதலையாரிதங்கப்பனைக் காணுததால் வெகுநேரம் வரை காத்திருந்துவிட்டு அவன் வீட்டுப் பக்கம் சென்ருர்.

பட்டாமணியாரைக் கண்டதும் தங்கப்பன் "நான் வாங்கி வந்த பணத்தைக் கொடுத்து மருந்து வாங்கியும் பயனில்லையே" என்று அழுதான்.

"அதற்கு யார்தான் என்ன செய்வது" என்று ஆறுதல் கூறுவது போல் கூறிவிட்டு, வேகமாக நடந்து சென்ருர் அவ்விடத்தைவிட்டு.

தலையாரி வாய்தாப் பணத்தை எடுத்து மருந்து வாங்கியதை அவன் வாயாலேயே தெரிந்துகொண்டதால், பணத்தைக் கையாண்டான் என்ற குற்றத்தைச் சுமத்தி போலீஸ் உதவியோடு தலையாரி தங்கப்பன் வீட்டுக்கு போனுர்.

தங்கப்பன் தன் துயரையெல்லாம் வெளிப்படுத்தி அழுதான். போலீஸ் காரனைக் கண்டவுடன் 'போலீஸ் ஏன்' என்று வினவினன். பதில் சொல்ல நாதியில்லை. போலீஸ் காரன் கடமையைச் செய்யத் தங்கப்பனின் கையில் விலங்கை மாட்டினுன்.

தலையாரி தங்கப்பன் கெஞ்சினுன்; காலில் விழுந்தான்" என் மனைவியை அடக்கம் செய்துவிட்டாவது வர்ரேன். ஆயுள் பூராவும் கூட வேணுமினுலும் சிறையில் போட்டுடுங்க" என்று கெஞ்சினுன்.

அவன் குரல் பட்டாமணியார் காதில் ஏறவில்லை. தலையாரி தங்கப்பன் விலங்கோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் செல்லப்பட்டான். பட்டாமணியார் தன் கடமையைச் செய்துவிட்டதாக எண்ணிப்போலீஸ்காரன்பக்கம் புன்னகையை தவழவிட்டார். தலையாரி தங்கப்பன் இரும்புக் கம்பிகளிடையே, தூரத்தில் தன் மனைவியின் உடலைத் தீ தழுவுவதைப் பார்த்துக்கண்ணீரைச்சொரிந்தான்.

✱



# சன்யாசி!

[நாகை-தருமன்]

ஆரம்பநாளிலிருந்தே கண்ணனின் இதயத்தில் பக்தியென்ற விதையை விதைத்து, வளர்த்து வந்தனர் அவன் பெருேர். சிறு குழந்தைக்கென்னதெரியும்? ஏதோ கையிரண்டையும் சேர்த்துவைத்துக் கும்பிடு என்ருர்கள்—அதுவும் கும்பிட்டது!

நாட்கள் சென்றன...! குழந்தை வினு அறியும் பருவத்திற்குவந்தது. பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டிய பிள்ளையை மடத்திற்கு அனுப்பினர். வெறும், பக்தியில் மட்டுமே அவனை உருவாக்கி, அப்பர், சம்பந்தர்போல் ஆக்க விரும்பினர்போலும் கண்ணனது பெற்றோர்!

கண்ணன் வளர்ந்தான்! அவனேடு அவன் தாய், தந்தையர் ஊட்டி வளர்த்திருந்தபக்தியும் விசுவரூபமெடுத்து வளர்ந்திருந்தது. அவன் இருபது வயதைக் கடக்கும் போது அவன் பெற்ருேர் இந்த உலகைவிட்டே கடந்துவிட்டனர். அவன்—அனுதையானுன்!

பெற்ருேர்கள் மடிந்ததைநினைத்துக் கண்ணன் அதிகமாக வருந்தவில்லை. முன்பைவிடக் கோவில்களுக்கு அதிகமாகச் சென்ருன். இப்படிச் சில ஆண்டுகள் சென்றன.

நாட்கள் செல்லச்செல்ல அவனுக்கே சலிப்பேற்பட்டது. ஒரே ஊரில்உள்ள கோயில்களை எத்தனை நாட்களுக்குத்தான் சுற்றிவருவது? ஊரைவிட்டேபுறப்பட்டுத்,திருத்தணி திருப்பதி என்று வரிசையாக ஆண்டவன் இருக்கிருன் என்று அவன் கேள்விப்பட்ட இடங்களுக்கெல்லாம் சென்ருன், ஆனுல், அவன் எண்ணியதுபோல் அங்கெல்லாம் கடவுள் அகப்படவில்லை. பல ஊர்களைச் சுற்றியபின் தனது ஊரை நினைத்துக் கொண்டான்—திரும்பினுன். வரும் வழியில் சிக்கலில் ஒரு சத்திரம்! சாமியார் பரிவாரங்களோடு அன்றைய இரவைப்போக்க அங்கே தங்கினுன்.

✱

பொழுது புலர்ந்தது! உழவர்கள் ஏர்தூக்கி நடந்தனர் வயல்நோக்கி! பறவைகள் கூடுவிட்டுப் பறந்தன உணவைத்தேடி! கண்ணனின் பழைய நினைவுகள் கலைந்தன. ஆனுல் புதியகுழப்பம் வந்து குடிபுகுந்துவிட்டது.

பல ஊர்களைப் பார்த்துவிட்டான். பல கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எத்தனையோ கடவுள்களின் வரிசையைத் தொழுதுவிட்டான். அதனுல் வந்ததுதான் சந்தேகம்!

ஊருக்குப் பத்துக்கோயிலிருந்தால் ஆண்டவன் எங்கேயிருப்பான்? எங்கும் நிறைந்த பரம்பொருள் ஏன் என் கண்ணில்மட்டும் படவில்லை? இவ்வளவு நாள் பல ஊர்களுக்குச் சென்று, கோயில்கண்டு வலம்வந்ததெல்லாம் வீண்தானு' அவன் சந்தேகத்தோடு அருகே படுத்திருந்த சன்யாசிக் கும்பலின் தலைவனைப் பார்த்துக்கேட்டான்.

"சாமி...! ஒரு சந்தேகம்..."

"என்ன சந்தேகம் அப்பனே?" பெரிய சாமியார் தனது மௌன நிலையிலிருந்து விடுபட்டுக் கண்ணனைப் பார்த்துக்கேட்டார்.

"சாமி! இந்த வயதில் நான் சுற்ருத ஊரில்லை! தொழாத கோயில் இல்லை. ஆனுல் என்ன காரணமோ நான் இன்னமும் கடவுளைப் பார்க்க முடியவில்லை! இதற்கென்ன காரணம்

சாமி?" மனதில் உள்ள சந்தேகத்தை அவரிடம் கொட்டினான்.

"அட . . . பாபி! உன் ஊனக் கண்ணால் அந்தப் பரிசுத்தமான ஈசன் திருஉருவை இவ்வளவு விரைவில் காண இயலுமா?"

சந்தேகத்தைக் கேட்டதற்குப் பாவி என்று அர்ச்சனை!

"ஐயா . . . என் மனமறிந்து இது வரை எந்தப் பாவமும் செய்ததில்லை. சிறு வயதிலிருந்தே கோயிலைக் காண்பதும்,ஈசனைத்தொழுவதும்தான் என் நித்ய கடன்! இப்படிப்பட்டஎனக்கே கடவுள் காட்சி தராததுதான் ஆச்சரியமாக யிருக்கிறது!"

"அபச்சாரம்! சிவ . . சிவ . . ! உன் நாவில் ஏதோ துஷ்ட தேவதை குடியிருக்கிறாள்; அதனால்தான் நீ இப்படி யெல்லாம் பேசுகிறாய்! கடவுள் எங்கிருக்கிறார் என்பதையே மறந்துவிடு! உன் இதயத்தை ஈசுவர, தியானத்திலேயே ஈடுபடுத்து. நீ . . முடிவில் உண்மையான கடவுளைக் காண்பாய்! மனப்பாடம் செய்து ஒப்பித்ததுபோல் சாமியார் ஒப்பித்தார்.

"சாமி . . . ! இதுவரை நீங்கள் சொல்லியதைவிடக் கடுமையான முறையில் என்னை மறந்து இறைவனை வணங்கியிருக்கிறேன். ஆனால் இது வரை எந்தஅறிகுறியும் இல்லாததால் எனக்கே சந்தேகமாக இருக்கிறது..?"

சாமியாருக்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்னப்பா சந்தேகம்; மறுபடியும் . . ." என்றார்.

**"நான், கோயிலில் தெய்வம் இல்லை யென்று நினைக்கிறேன் சாமி! கடவுள் வேறு எங்கோ இருக்கிறார்.** அதைத் தான் நான் கண்டுபிடிக்கப் போகிறேன்."

சாமியாருக்குக் கோபம் வந்துவிட்டது. செல்லிடத்தே சினத்தை விடுகின்ற, சகல உணர்ச்சிகளையும் அடக்கி ஆளும் சாமியாரல்லவா அவர். அவர் சும்மா இருப்பாரா?

"ஏய் . . ! இந்தப் பரதேசிப் பயலை அடித்து விரட்டுங்கள். காவி உடை அணிந்தும், கடவுளைக் கண்டபடி விமர்சிக்கும் இக் கயவன் நமக்குத் தேவையில்லை. பிடித்து வெளியே தள்ளுங்கள்." ஆத்திரத்தில் தன்னை மறந்துவிட்டு அவனைப் பரதேசிப் பயல் என்றார், சாமியார்!

அவரது பரிவாரங்களாகிய பழைய சோற்றுப் பண்டாரங்கள் கண்ணனை வெளியே பிடித்துத் தள்ளினர்.

"மனதில் எழுகின்ற சந்தேகத்தை மறைக்காமல் கேட்டால் தவறு! உண்மையைச் சொன்னால் தண்டனை! நல்ல . . . உலகம் . . . "கண்ணன் வாய் முணுமுணுத்தது. அவன் அந்தப் போலிச் சாமியார் பட்டாளத்திற்கு ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டுத் தன் வழியே நடந்தான்.

அவன் கால்கள் களைப்பைப் பாராதுநடந்துகொண்டேயிருந்தன. எதிரே எத்தனையோ கோயில்கள் தென்பட்டன. இப்போது கண்ணன் கோயிலினுள் செல்லவில்லை! சாமியைக் கும்பிடவும் இல்லை! ஆனால் காவியுடை மட்டும் அவன் உடலைச் சுற்றியிருந்தது.

கதிரவன் உச்சியிலிருந்தபடி தன் வெம்மையை வெளியிட்டான். கண்ணனுக்கு ஒரே களைப்பு!ஓய்ந்துபோய் ஒரு மர நிழலில் அமர்ந்தான். சுற்றிச் சுழன்ற அவனது கண்கள் எதிரே யிருந்த வயலில் உழவர்கள் உழுகின்ற காட்சியைக் காணுகின்றான்.

கீழே சகதி! வெறுங் காலோடு ஏரைக் கையில் பிடித்தபடி இன்னொரு கையால் மாட்டைத் திரும்பித் திரும்பி ஓட்டி, நிலத்தை உழுவதைப் பார்க்கிறான். அவனது உடலிலிருந்து வழிகின்ற வியர்வை வெள்ளம் சேற்றோடு சேருகக் கலப்பதையும் காணுகிறான். அவனுக்குத் திடீரென்று தெளிவு பிறக்கிறது? சந்தேகம் கொஞ்சம் கொஞ்சமாக நீங்குகிறது. மீண்டும் உழவன் முகத்தைக் கூர்ந்து நோக்குகிறான் --- கவலைக் குறிகள் காணுகின்றனவா என்று!

ஆனால், உழவன் முகத்தில் கவலைக் குறிகளே காணவில்லை! எத்தனை துன்பங்கள் அவனுக்கிருந்தாலும் அவன் முகம் அவனது உள்ள உறுதியைக் காட்டுகிறது. கண்கள் அவன் மனதில் களங்கமற்ற தன்மையைக் காட்டுகின்றன.

அவன் உதடுகள் உலர்ந்துதானிருக்கின்றன. ஆனால் அதில் புன்னகை மட்டும் தவழ்ந்துகொண்டுதானிருக்கிறது. அவனது உடல் ஒட்டிப் போய்த்தானிருந்தது.

கண்ணனின் சிந்தனை தீவிரமாகியது. அவன் கடவுள் இருக்கும் இடத்தைக் கண்டுகொண்டான்!

தனது சுகம் ஒன்றையே பாராமல் தனது உழைப்பால் தன் நாடும், மக்களுக்குப்பயன்பெறஉழைக்கும் இந்த **உழவனின் நல்ல இதயம்தான் கடவுள்!** உழைப்பினால் ஏற்பட்ட வியர்வை அந்தத் தெய்வத்தை அபிஷேகம் செய்து, வயலில் உரத்தோடு உரமாகக் கலக்கிறது. அது வியர்வை யல்ல....தெய்வத்தை அபிஷேகம் செய்யும் பன்னீர்! அந்த உழவன் மனமகிழ்ந்து, கள்ளமிலாது சிரிக்கும் சிரிப்புத்தான்தெய்வத்தைஅலங்கரிக்கும் மணியிழைத்த பொன் ஆபரணங்கள்!

கண்ணனின் மனம் உண்மையைக் கண்டு கொண்ட நிறைவால் பெருமிதம் கொள்கிறது. சிலையைக் கண்டு தெய்வமென்று சிரம் தாழ்த்திவணங்கிய அவன், ஒரு தூய இதயத்தை மானசீகமாகப் பார்த்து வணங்கிய படி எழுகிறான்.

"கல....கல"வென்ற சிரிப்பொலி அவனைக் கவர்கிறது. உழவனும் அவன் மனைவியும் ஒரு ஓரமாக அமர்ந்து கதை பேசியபடி கஞ்சி குடித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் தன்னை மறந்து அமர்ந்திருந்த நிலை, கண்ணனுக்கு ஆச்சரியமூட்டியது.

ஆண்டவனை நினைத்தபடி தன்னை மறந்து, அவன் இருந்திருக்கிறான். 'இவர்களால் எப்படி உலகத்தையே மறந்து இப்படி இருக்க முடிகிறது?' அவன் தன்னையே கேட்டுக்கொண்டான்.

அவர்கள் இருக்கும் நிலை அவனுக்கு எதை, எதையோ, கதை கதையாகக் கூறுகின்றது. அவன் உடலில் புதிதாக ஏதோ ஒன்று புகுந்தது போலிருக்கிறது. கடைசியாக 'நாமும் இப்படி இருந்தால் என்ன?' என்ற எண்ணமும் வருகிறது.

இப்படிப் பலவாறாகச் சிந்தித்தபடி தனது சொந்த ஊராகிய நாகூர் வந்தடைகிறான் கண்ணன்.

ஓய்வாகத் தனது இல்லத்தில் பல நாட்கள் தனது அறிவு வழியே சிந்தனையின் பயனால் எழுந்த எண்ணங்களை மோதவிட்டு, முடிவு செய்கிறான். அவன் காவி உடைகள் அகற்றப்படுகின்றன. அவன் உடலை வெள்ளை ஆடைகள் தழுவுகின்றன. தன்னைத் தழுவ ஒரு துணைவியும் தேவையென அவன் இளமை அறிவிக்கிறது.

முடிவில் துறவியாகக் காலம் கழித்தவன் துணைவியாக ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து, மணந்தான். கோவிலில் தெய்வத்தைத் தொழுத அவன் குணமுள்ளோர் இதயத்தை வணங்கினான்.

அன்பிலே, அறத்திலே, மனிதப் பண்பிலே ஈசனைக் காணவில்லை யானாலும், மன அமைதியைக் கண்டான். தன்னலத்தை உண்மையான இறைவன் இருந்தால் விரும்பமாட்டான் என்பதறிந்து, பொதுப்பணிக்குத் தன்னை ஈந்தான். மக்கள் பணியே மகேசன் பணி என்பதை உணர்ந்தான். ஒன்றே குலம் ஒருவனே கடவுள் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தி நாடு முன்னேற நல்ல பல பொதுப்பணிகளைக் கண்ணனும் அவனது துணைவியும் சேர்ந்து செய்யத் தொடங்கினர்.

○

# "மழையும் — மங்கையும்"

— ஆ. பழம்நீ —

**அவன்:**

இமயம் இடிக்கும் தோள்வலியும் எண்ணியதை முடிக்கும் மனவலியும் கொண்டவன். வேல்பட்ட தழும்புகளில் மகளிர் விழிபட்டு மொய்த்திருக்கும் அகன்ற மார்பினன். ஆரம் குழைத்து அகன்ற மார்பில் பூசி முத்தாரம் அசைந்தாட முறுவல் எழில் கூட்ட, அவன் நடந்துவரும் தனியழகு; மடந்தையர்க்குப் பெருவிருந்து.

எண்ணிறந்த வேல்வீரர் இருமருங்கும் புடைசூழ; வெற்றி வீரனோ? மற்றெவனோ? விற்கொடியார் இளவரசோ? என்று வினா எழுப்பும் தோற்றத்தான். .கோவைப்பழத்தை இரு கூருக்கத் தண்ணிலவில் மேவி இருந்ததுபோல் விளங்கும் இளநகையான்.

மாறனோ? சோழனோ? மாமன்னர் பீடழித்த சேரனோ? யாரிவன் என்று பல சிந்தித்துச் சோர்ந்திருப்பர் சேயிழையார்.

ஏடெடுத்த கவிவாணர் இதயம் போல், மலர்க் கொடிகள் இதழெடுத்து மலர்ந்திருக்கும் எழில் காணப் புறப்பட்டான்.

**அவள்:**

வெண்ணிலவில் ஒளியெடுத்து விரிமலரில் மணமெடுத்துப் பெண்ணுருவாய் வந்துதித்த பெற்றியினள்.

பொதிகைமலைத் தென்றல் போக்கின்றி அலைவதெல்லாம் மதியாள் உடல் தழுவும் மணங் கொண்டே என்பார்கள்.

அந்திக் கமலம்முதல் அள்ளற் பழனத்துச் செந்தீக் கமலம்வரை சிரித்திருக்கும் மலர்க் குவியல்.

நிலவோடு விண்மீன்கள் நெருங்கி வரப் பார்த்ததுபோல், அவளோடு தோழியர்கள் அருகிருக்க வழி நடந்தாள். வண்டூதும் மலர்க் கொத்தை வளைக் கரத்தால் கொய்து திரள் செண்டாக்கி விளையாடச் சேயிழையார் விரைந்தார்கள். நிறைய மலர் பறிக்கும் நீள்நோக்கம் கொண்டவராய்ப் பிரிந்து திசைமாறிப் பேச்சொழித்துச் சென்றார்கள்.

என்னைத் தொடுவாயா?! என்றசையும் மலர்க் கொடியைச் சென்றெடுத்தாள் — மலரெடுத்தாள் — திரும்ப அடியெடுத்தாள் அடியெடுத்த வேளையிலே "ஐயோ" எனும் சொல்லை இதழ்விடுத்தாள்; நெருங்கிப் பழமொன்று நெருடியது கால்மலரை.

அப்பொழுது—

மொட்டவிழ்த்துக் கட்டவிழ்த்துக் முகிழ்க்கும் எழில், விழியில் பட்டிழுக்க நின்றான் அவன். பாவை விடுத்த ஐயோ தொட்டிழுக்க அவன் செவியில், துடித்தான்; யாழொன்று கீழ்வீழ எழுந்த இசை இதுவோ? என்று பல எண்ணினான்.

"ஐ" என்றால் வியப்பென்பார். "ஓ" எனினும் வியப்பே என்பார். "ஐயோ" எனச் சேர்ந்தால் பெரு வியப்போ? யாரறிவார். பாவலரே கூறவல்லார் என்று பல எண்ணி "இசை" வந்த திசை நோக்கிச் சென்றான். ஆலயத்துச் சிலையொன்று தரையமர்ந்து முள்ளெடுக்கக் கண்டான்-முடுக்கிவிட்ட பொறி போல் பாய்ந்தான் — அவள் காலைப் பற்றினான்; கைவிரலால் குத்திவிட்ட முள்ளெடுத்தான். குருதி வழிந்துவர, ஒற்றிவிட்டான் — தன்னுடைய உத்தரியப் பூவாலே.

விரல்பட்ட யாழ்போல—கைபட்ட தளிர்போல. உடலதிர்ந்தாள்–உளம் நெகிழ்ந்தாள். பள்ளத்தை நோக்கி ஒன்றாய்ப் பாய்ந்துவரும் வெள்ளம் போல், உள்ளத்தால் — எண்ணத்தால்–ஒளிவிழியால் ஒருவரையொருவர் உண்ணத் தலைப்பட்டார்.

பிறகு...? பிறகென்ன, மாலை வாராதோ மயக்கந்தான் தீராதோ? நெஞ்சு கண்ட கனவெல்லாம் நேரில் கிடைக்காதோ? என்ற நிலைதான். ஆமாம். "காதலோ காதல்" என்கின்றார்களே, அது அவர்கள் கையில் சிக்கிவிட்டது.

அவள் நகர்ந்தாள். அவன் தொடர்ந்தான். அவள் எட்டிவைத்தாள் நடையை. அவன் தொட்டிழுத்தான் கரத்தை. "தோழியர்கள் காத்திருப்பர் தொல்லைகள் செய்யாதீர்" என்றுரைத்தாள். அவனோ சிரித்தான்—தொடர்ந்தான் — செந்தமிழில் பாட்டிசைத்தான்.

**அவன்:**

வேரிற் பழுத்த பலா நேரில் இருக்க—
மனம்
வேம்பின் இளங்காயை எண்ணுவ
துண்டோ?

**அவள்:**

கோரிப் பெறுவதை விட்டுவிட்டு—வன்
கொடுமைகள் செய்வதெலாம் முறை
யாகுமா?

**அவன்:**

சொல்லி முடிப்பதற்குள் செயல் முடிந்
தால்—இந்தத்
தொல்லைகள் என்றுமே நேருவதில்லை

**அவள்:**

சொல்லித் தெரிவதல்ல இந்தக் கலைகள்
—என்று
சொன்னவன் வார்த்தைகள் பொய்
யாகுமா?

**அவன்:**

வார்த்தைகளை ஏனோ வளர்த்துகிறாய்
—இந்த
வாய்ப்பை இழந்துவிட மனம்வருமா?

**அவள்:**

சேர்ந்த பெருஞ்செல்வம் நானுனக்கு
—அதைச்
செலவுகள் செய்வதிலும் அவசரமா?

**அவன்:**

காற்றுள்ள போதன்றோ தூற்றவேண்டும்
—இந்தக்
கருத்தன்றோ என்னினைவை வருந்துவது

பாடி முடித்தார்கள். முப்பாலின் மூன்றும்பால் பயின்று முடித்தார்கள். "தேடிவருவேன் நான் தினமும் வரத் தவருதே" என்று கோடி முறை கூறிக்கூடிப் பிரிந்தார்கள்.

இவையெல்லாம் சென்றொழிந்த நாள் தந்த சிதையாத ஓவியங்கள். காலம் மறைந்தாலும் கண்ணில் மறையாது நெஞ்சில் நிலைத்துவிட்ட நீங்காச் சுவைக் கனவு. ஆமாம் கடந்த கால நிகழ்ச்சிகளின் கோவை இது.

இன்று...? நெஞ்சோடும் நினைவோடும் இருந்த உறவு, பஞ்சோடு சிறு நெருப்புப்பற்றி எரிந்தாற்போல் வஞ்சிக் கொடியார்தம் வாய்க்கெல்லாம் உறவாகி—வெறும் வாயை அசைப்பார்க்கு அவலாக மாறிற்று.

அதன் விளைவு...?

இளவேனிற் காலத்தில் குயிலை இசைக்காதே என்றதுபோல், மழை நாளில் மாமயிலை ஆடாதே என்றது போல், பூம்பொழிலோ—புனல் யாறோ போகாதே என்ருர்கள் அப்பொற்றொடியை. பாவம் கூண்டுக் கிளியானுள் கோதை.

நெஞ்சோடும் நினைவுகளில் நிற்பாள், அந்த நினைவோடும் வழியெல்லாம் மீள்வாள், ஓடும் மஞ்சோடு தன் காதல் சொல்வாள். பூத்த மதியோடும் சினம் கொண்டு நிற்பாள்.

நாட்கள் ஒன்றிரண்டு நகர்ந்தன. சித்திரத்தைத் தீட்டித் திரையிட்டு மறைத்ததுபோல் வான நித்திலத்தைக் கருமேகத் திரை சூழ, காற்றோடு, மின்னோடு, காதைத் துளைத்துவரும் இடியோடு பெருமழையும் இணைந்தொன்றாய்ச் சேர்ந்துவர நெஞ்சத்தில் துன்பம் நெருப்பாக மண்டியது.

அப்பொழுது;

பெருமழையில் விரைந்து நடந்து வந்தான் அவன். வேலிப்புறத்தருகே வேலூன்றி நின்ருன். உள்ளத்தில் சூடிருந்தால், உடலை மழையோ காற்றோ என் செய்ய முடியும்? என்பதுபோல் இறுமாந்து நின்ருன்.

எங்கோ திரும்பியவள் அவன் எழிலுருவைக் கண்டுவிட்டாள். கண்ட பின்னும் அவள் எழவில்லை, தொழவில்லை, எதிர்கொண்டு செல்லவில்லை. மாருக, பார்த்தும் பாராததுபோல் இருந்தாள். அம்மட்டோ? அருகிருந்த தோழியொடு வில்லோடும் புருவத்தை விழியோடு மேலுயர்த்திச் சொல்லாடத் தொடங்கிவிட்டாள். இதோ அவள் சொற் சித்திரம்.

"என் இனிய தோழியே! பார்த்தாயா மழையை! கருணைக்கு மறு பெயர்தான் மழையென்று கூறுகின்ருர். இதுவா கருணை நிறைந்த செயல். நீண்டு படுத்திருக்கும் நெடுமலையின் புற்றுகளில் வாழ்கின்ற பாம்பனைத்தும் சாகட்டும் என்றுதானே இடியையும் துணைக்கழைத்து வந்தது இந்தக் கருனை மழை"

"பாம்பாவது பிறர்க்குத் தீமை விளைவிப்பது. அது அழிவதனுல் தீங்கொன்றுமில்லை என்பாய். போகட்டும், நானென்ன தீங்கு செய்தேன்? தீங்கு செய்யாதவள் மட்டுமல்லவே...? பிறர் செய்த தீமைகளால் சிதறுண்டு போனவள் அல்லவா?

"வானத்தை அளப்பதுபோல் வளர்ந்து நிற்கும் இமயத்தை, இமை நேரத்தில் அழித்துவிடும் ஆற்றல் படைத்ததுதான் இந்த மழை. ஆனல், இத்துணை ஆற்றலும் ஒரு துணையில்லாத, இரங்கத்தக்க, பெண்ணைத் துன்புறுத்தத்தானே பயன்படுகிறது. இன்னும் மழையைக் கருணை நிறைந்தது என்று சொன்னுல் யாரடி நம்புவார்கள்."

"ஒறுத்தாரோடு பொருதலே வீரம், மற்றெல்லாம் செத்தாரோடு பொருதலோடொக்கும்" என்பது தானே மறவர் குலத்தின் மறையா முதுமொழி? மழையோ இமயமும் துடிக்கும் பண்பினையுடையது. ஆனல் யானே? துணைவலியை மட்டுமல்ல—என் மனவலியையும் இழந்தவள். மழைக்கு இது தகுமோ?"

"வலியிலார் ஆயினும் துணைவலியுடையாராயின் ஒருவாறு ஒப்பலாம். யானே...? துணையிலள்."

"துணைவலி இல்லாராயினும் சற்றேனும் எதிர்நிற்கும் ஆற்றல் இருப்பின் அமைவுடைத்து எனலாம். யானே? துணைவலியை மட்டுமல்ல —என் மனவலியையும் இழந்தவள். மழைக்கு இது தகுமா?"

"போகட்டும். வெற்பை இடிக்கும் வீரம் மிக்க மழை, தன் வீரத்தைக் காட்டுவதற்குத் தேர்ந்தெடுத்ததுதான் யாரையோ என்ருல்—ஒருபெண்ணை, அதுவும் துணையற்ற, இரங்கத்தக்க பெண்ணை."

"மழையின் வீரத்தைப் பார்த்தாயல்லவா? துணையற்ற பெண்ணிடம், இடி, மின்னல், காற்று, ஆகிய துணைவலியோடு வந்து துன்புறுத்துகிறதே! இந்த வீரம் யாருக்கு வரும்"

"பெண் என்ருல் 'பேயும்' இரங்கு மென்பார். கருணையே வடிவான மழை இரங்கவில்லையே...?!"

"இடியும் மழையும் பிறர் கண்ணுக்கும் செவிக்கும் புலனுயினுற் போல, என்னுடைய ஒழுக்கமும் பிறர் கண்ணுக்கும் செவிக்கும் புலப் பட்டுவிட்டதடி."

"இடியோசையால் பாம்பு இறந்தொழிந்தாற்போல எழுகின்ற "அலர்" ஓசையால் என்னுயிர் ஒடுங்குகின்றது."

"இந்த நிலையினை நம் தலைவன் உணர்ந்தானில்லையே? உலகத்து உயிரையெல்லாம் வளர்க்கின்ற பெருமழைதான் சிற்சில வேளைகளில் பாம்பு முதலியவற்றிற்குப் பகையாகினுற்போல, என்னுயிர் தளிர்க்குமாறு தீண்டிவந்த அவனுடைய நட்பு, இன்று நெஞ்சழிக்கும் பகையாக மாறிவிட்டது. பகை நட்பாகுமா? தீமையில்லாத மழை திரும்பவும் பொழியுமா? 'கொடுப்பதும் கெட்டார்க்குச் சார்வாய் எடுப்பதும் மழை' என்று கூறுவார்களே பெரியோர்கள். கெடுத்ததெல்லாம் போதும், எடுப்பதற்காக இனியேனும் இனிய மழையாகிய அவன் வரைவொடு (மணத்தோடு) வரமாட்டானு? கூறடி தோழி!"

படுகின்ற துன்பத்தைப் பாவையுரைத்த பின்னும் விடுவானே காதலியை வீழ்த்தும் தனிமையிலே. மணம் பேசித் தூதுவர, மகிழ்ச்சியிலே அவள் திளைக்க, திருமணம் முடிந்திருக்கும்.

இக் கருத்தினை விளக்கும் குறுந்தொகை தரும் விருந்து காணீர்.

நெடுவரை மருங்கின பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அனைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை
நூர்அளி இலையோ நீயே? பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினை;
துணையிலர், அளியர், பெண்டிர், இஃது
எவனே?!

★

# சீனப் புதிய சுவர்!

லிடியா

"திங்கட்கோளில் மனிதன்! அறிவியலின் வெற்றி! அணுவியலின்வெற்றி!பொறியியலின் வெற்றி! மனிதன் இயற்கையை வென்றுவிட்டான்! விண்ணுலகில் தண்மதியில் மண்ணுலகின் முதல் மனிதன்! வெற்றிகரமான சந்திரமண்டலப் பயணம்! அங்கிருந்து மண்ணுலகு தெரியும் மாபெரும் காட்சி! ஆம்! சந்திரனிலிருந்து தன் மண்ணுலகைக் காண்கிருன் அவ்வறிவியல் வீரன்! அதோ! அவன் கண்களுக்கு என்ன தெரிகிறது? 'கிரெம்லின்' தெரிகிறதா? 'ஒயிட் ஹவுஸ்' தெரிகிறதா? 'பர்மிங்ஹாம் பாலஸ்' தெரிகிறதா? அல்லது 'ஈஃபிள்டவர்' தெரிகிறதா? இல்லை! அதெல்லாம் இல்லை! அவன் கண்களுக்கு இந்தப் பூமியின் முழு அழகும் தெரிகிறது. 'யூரிகாகரின்' கண்டதைவிட, 'டிட்டோவ்' கண்டதைவிட, 'கார்பெண்ட'ரும் 'ஷெப்பர்டு'ம் கண்டதைவிட, மிக்க அழகுள்ள பூமியைக் காண்கிருன் இவன். அதோ! இந்தப் பூமியின்மீது ரேகை போன்ற நீண்ட கோடு தெரிகிறதாமே! அது என்ன? பூமத்தியரேகையா? கடகரேகையா? அல்லது மகர ரேகையா? அப்படி ரேகைகள் ஏது? அவை கற்பனை தானே? அப்படியானுல் அந்தக் கோடு என்ன? சந்திரனிலிருந்து காணும்போது பூமியின் ஒளிமயமான மேல்தளத்தின் குறுக்கே தெரியும் கீறல்போன்ற கோடு எது? இன்னும் இரண்டொரு நாட்களில் அறிவியலார் இதனை விளக்குவர்!"

இது போன்றதொரு செய்தியை நாம் நாளிதழ்களில் காணும் நாள் நெருங்கிக்கொண்டுதானிருக்கின்றது. 'திங்களிலிருந்து நோக்கும்போது அந்த முதல் சந்திர மகனுக்கு நிச்சயம் பூமியின்மேல் அப்படி ஒரு கோடு தெரியவே செய்யும். அதுதான் சீனப் பெருஞ்சுவர்!' என்று சில அறிவியல் அறிஞர்கள் முன்னுணர்ந்து கூறுகின்றனர். நம்மில் பலர் சீனப் பெருஞ்சுவரைப்பற்றிக் கேட்டிருக்கிறோம்; கற்றிருக்கிறோட் உலகின் ஏழு விந்தைகளில் ஒன்ருகக் கருதப்பட்டது.

இருபத்தைந்து அடி அகலமும், ஐம்பது அடிவரை உயரமும் கொண்டகனமுள்ளதாக ஆயிரத்து எண்ணூறு மைல் நீளமுள்ளது 'சீனப் பெருஞ்சுவர்.'

உலகில் தோன்றிய மிகப்பெருங் கொடுங்கோல் மன்னன் 'ஷி-ஹ-வொங்-ட்டி' என்பவனுல் கட்டி முடிக்கப்பட்ட கற்கோட்டை அது. அவன் 'சீன்' என்னும் குலவழி வந்தவன். அக்குலத்தின் பெயராலேயே அந்நாடு இன்றும் சீனம்—சீனு என்று அழைக்கப்படுகிறது. அகண்ட ஒன்றித்த சீனத்தின் முதற்பேரரசனும் அவனே. கிறிஸ்துவுக்கு முந்தின மூன்ரும்—இரண்டாம் நூற்ருண்டுகளில் அவன் வாழ்ந்தான் என வரலாறு கூறுகிறது. ஆசியாவில் கொலையும், கொள்ளையும், கொடுமையும் புரிந்துவந்த நாடோடி ஹ-ஊனர்களில், அநாகரிகப் படைஎடுப்புக்களைத் தடுக்கவே அந்தச் சுவரைக் கட்டினுன் மன்னன். பல்லாயிரக்கணக்கான மக்களுடன், முன்னூருயிரம் படை வீரரும் சேர்ந்து படைத்தனர் அச்சுவரை. ஒரு குறிப்பிட்ட பகுதியில் சுவர்ப்பணி முடிந்ததும், வேலையில்லாத மக்களை அங்கங்கே கொன்று குழியில் புதைக்கக் கூறினுனும் அக்கொற்றவன். அரசுக்கு உணவு மிச்சம். எண்ணற்ற அடிமைகள் உயிர்க்காவு கொடுக்கப்பட்டுச் சுவரின் அடித்தளத்திலே புதைக்கப்பட்டனர்—சுவரின் நீண்ட நல்வாழ்வக்காக. இப்படி, அடிமைகளின் குருதியிலே; மக்களின் உடலையும் ஊனையும்கொண்டு பதினெட்டு ஆண்டுகளில் தொடர்ந்து நடந்து முடிவுற்றது அப்பெரும் பணி. எத்தனையோ இலட்சக்கணக்கானவர்களைக் கொன்றுகளித்தும் மன்னன் மனம் நிறைவுகொள்ளவில்லை. மக்கள் தொகை பெருகியவண்ணம் இருந்தது. நாட்டில் போ[illegible]ய உணவில்லை. வேலைசெய்தாலன்[illegible] உணவு தர மறுத்தான் மன்னன். வேலையோ தீர்ந்துவிட்டது. மக்களோ பட்டினியால் வாடினர்; மடிந்தனர். மடியட்டும், மக்கள் தொகை குறையட்டும் என்று மன்பதை உணர்வு சிறிதும் இன்றி, மமதையுடன் இருந்தான் மன்னன். மலைகள் நாட்டின் இயற்கை அரண் அல்லவா? அங்கெல்லாம் சுவர் எழுப்பப்படவில்லை முதலில். மக்கள் வேலையில்லாதிருத்தலைக்கண்டு, உயரமான மலைகளிலும்கூடச் சுவரைத் தொடர்ந்து கட்டச்சொன்னுன் மன்னன். அப்படியும் மக்கள் முழுதும் மடியவில்லை. சுவரில், ஒவ்வோர் அறுநூறு அடி தூரத்திலும், சுவருக்குமேல் நாற்பது அடி உயரமுள்ள கோபுரங்கள் கட்டச்சொன்னுன். அப்படிக் கட்டி முடிக்கப்பட்டவை பதினுயிரம் கோபுரங்கள். இன்னும் மடியவில்லை மக்கள். வேறுவேலையும் கொடுக்க முடியவில்லை அவர்களுக்கு. உழைப்பிலே செத்தாலும் சரி! பட்டினியால் மட்டும் சாகக்கூடாது என்ற உரம் பெற்றுவிட்டனர் மக்கள். உணவைக்காட்டி, மக்களிடம்உழைப்பை வாங்கி அவர்களின் உயிரையும் வாங்கவேண்டும்; மக்கள் தொகை குறையவேண்டும் என்ற முடிவில் இருந்தான் மன்னன்.

இந்த விந்தைமிகு வேந்தனுக்கு வேருெரு வேடிக்கையான ஆசையுமிருந்தது. கெடுங்குணம் படைத்த பேரரசன் மட்டுமல்ல அவன்; பேராசைக்காரனுகவுமிருந்தான். 'மக்கள் தொகை தொகையாய் மடியவேண்டும்; ஆனுல், தான் மட்டும் சாகக்கூடாது' என்ற பேராசை. எனவே நாட்டிலுள்ள எல்லா 'மாந்திரீக'ரையும் அரசவைக்கழைத்தான்.

"ஆலோசனை கூறுங்கள் என் ஆயுளைக் காக்க; என் ஆட்சியைக் காக்க. சாவை நான் சந்திக்கக் கூடாது! உங்கள் முழு அறிவையும் ஆற்றலையும் கூட்டுவீர்! அதை எனக்குக் காட்டுவீர்! எமனை ஏமாற்றுவீர்! என்னைக் காப்பாற்றுவீர்! இதில் சற்றும் தவறினுல் உங்கள் தலைகளை இழப்பீர்! இது உறுதியான என் ஆணை!"

மன்னன் தன் மமதையைக் காட்டினுன். மாந்திரீகர் தங்கள் மேதையைக் காட்டினர்—மன்னனின் மடமையைக் கண்டு.

"மன்னர் மன்னவா! நீர் நீடூழி வாழி! உம் எண்ணப்படியே உம் ஆயுளைக் காக்க இதோ ஓர் அரிய திட்டம்! மரணதேவ[illegible]. உ[illegible]

அனுகாதபடி ஒரு மாபெரும் திட்டம்! நீர் இருக்கும் இடம் இதுதான் என்று சாவின் தூதுவர் அறியாதபடி ஒரு நாளைக்கு ஒரு மாளிகையில் இருப்பீர்! இரவைக் கழிப்பீர்! இன்றோர் மாளிகை! மறுநாள் வேறு! அடுத்த நாள் இன்னொன்று! நாளுக்கோர் அரண்மனை! இரவுக்கோர் வீடு! இப்படியாக ஆண்டு முழுதும் மாறிமாறித் தங்கி வந்தால் எமதூதுவர் ஏமாறுவர்! மீறி வந்தால் நாங்கள் கவனித்துக்கொள்வோம்!''

மன்னன் மகிழ்ந்தான். "இப்பொழுது அதற்காகச் செய்யவேண்டியவற்றைச் செப்புவீர் சீக்கிரம்.''

"தலைநகரிலும், அதை அடுத்தும் உள்ள இடங்களிலும் புதிதாக முன்னூறு அரண்மனைகள் கட்டவேண்டும். ஒவ்வொரு அரண்மனையிலிருந்தும் அரசவையுடன் வந்து இணையும் பெருஞ் சாலைகள். நெடுஞ்சாலையின் இருமருங்கும் அடைபட்டிருக்க வேண்டும். இடையிடையே மறைவழி, சுரங்கவழி, அரண்மனை தோறும் முழங்கு முரசம், ஒலிக்கும் மணிமண்டபம், காவல் பட்டி, இன்ன பிறவும் அமைக்கவேண்டும்'' என்றனர் மறையோர்.

மக்கள் தொகையை இன்னும் குறைக்க இத்திட்டம் நல்லதாகப் பட்டது மன்னருக்கு. கொஞ்சமேனும் உணவு கிடைக்குமே என்று மனநிறைவு எழுந்தது மக்களுக்கு. மன்னவனின் ஆணைப்படி, மறையவரின் விருப்பப்படி, மக்களின் உழைப்பில் எல்லாம் உருவானது. இருநூற்று எழுபது அரண்மனைகள் கட்டப்பட்டன. நாட்டிலுள்ள அழகுப் பொருள்கள் அத்தனையும் கொண்டு வரப்பட்டன. பொன்னும் மணியும், முத்தும் பவளமும் கொள்ளைப் பொருளாகக் கொண்டு வரப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட பலநூறு அழகிய இளமங்கையரும் கொண்டுவரப்பட்டனர். ஒவ்வொரு மாளிகையிலும் ஒவ்வொரு மங்கை—அதன் பெருமையைப் பெரிதாக்கும் வகையில். கரும்பட்டுத் துணியில் வெண் முத்தினையும், வெண்பட்டுத் துணியில் இரத்தினத்தையும், செம்பட்டுத் துணியில் கோமேதகத்தையும், மஞ்சள் பட்டில் நீலத்தையும் வைத்து உருட்டி விளையாடும் அழகுணர்ச்சி படைத்தவனல்லவா மன்னன்! அவனுக்குத் தெரியாதா "ஆரணங்கு இல்லாத அரண்மனை பாழ்'' என்று! எண்ணியபடியே வாழ்ந்தான். வாழ்வைத் துய்த்தான். துய்க்கப்படும் எதுவும் துவண்டு விடும், குறைந்துவிடும் என்பதை எண்ணவில்லை அவன். கூடுவிட்டுக் கூடு மாறுவதுபோல, மாளிகை விட்டு மாளிகை தாவித் தாவி, மாறி மாறி வாழ்ந்துகொண்டிருந்தான்; எமனை ஏமாற்றும் எண்ணத்தால். எந்த நாளில், எந்த இரவில் மன்னன் எந்த மனையில் இருக்கிறான் என்பது எவருக்கும் தெரியாது; எமனுக்கும் தெரியாது. தெரிந்துகொண்ட எவரும் உயிர் தப்பி வாழவும் முடியாது.

இப்படி, மன்னனுக்கும் மரண தேவனுக்கும் கடுமையான போட்டி. கடைசியில் மன்னன் தோற்றான். தன் நாற்பத்தொன்பதாவது ஆண்டிலேயே மாண்டு போனான். பூமியின் அடியில் மிகப் பெரிய கல்லறை தோண்டப்பட்டது. அதன் உட்புறச் சுவர்களெல்லாம் வெண்கலத்தால் கட்டப்பட்டது. அழகிய மங்கையர் அனைவரும் கொல்லப்பட்டனர் அரசனின் ஆணைப்படி. அவனோடு அதே கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டனர். "நானே அகண்ட சீனத்தின் முதற் பேரரசன்! என் வழித் தோன்றல் எவரும் என்னையே முதல்வனாக வைத்து அரசோச்சட்டும்! இது என் ஆணை!'' என்று கூறிச் சென்றான் மன்னன். ஆனால் அவன் மாண்ட நான்காவது ஆண்டிலேயே அவன் குலக்கொடி அறுக்கப்பட்டது; பூண்டோடு அழிக்கப்பட்டது. அவன் வழித்தோன்றிய பத்து இளவரசரும், ஆறு இளவரசியரும் அந்த நான்காம் ஆண்டில் ஒரு நன்னாளில் தலைநகரின் முக்கிய சதுக்கத்தில் வைத்துக் கொல்லப்பட்டனர். 'சீன்' குலம் முடிவடைந்தது.

ஷின்—ஹூவங்—டி மாண்டான்! அவன் பேராசை மறைந்தது! அவன் பேரரசு மறைந்தது! அவன் குலம் ஒழிந்தது! கொள்கை மறைந்தது! அரண்மனைகள் தகர்க்கப்பட்டன! ஆரணங்குகள் கொல்லப்பட்டனர்! ஆனால் அவன் கட்டிய கற்கோட்டை நிற்கிறது. சீனப் பெருஞ்சுவர் இன்றும் நிற்கிறது. அவன் மனக்கோட்டை அழிந்தாலும், அவன் மலைக்கோட்டை நிற்கிறது. இரண்டாயிரத்து இருநூற்று ஆண்டுக்கால வரலாற்றைக் கண்ட பெருமையில் களிப்புடனும் பெருமிதத்துடனும் நிற்கிறது! கொலையும் கொள்ளையும் கொடுமையும் புரிந்த ஹூனரின் படையெடுப்புக்கு எதிராக, சீன நாட்டைக் கேடுறாதவண்ணம் அவர்களைத் தடுத்து நிறுத்திய சீனப் பெருஞ்சுவர்; நன்மை செய்த தடைச்சுவர் இன்னும் நிற்கிறது.

ஆனால் இன்று, சீனப் பொது உடைமைக் குடியரசினர் தங்கள் உள்ளத்தில் புதியதோர் பெருஞ்சுவரை — தடைக் கோட்டையைக் கட்டிக்கொண்டுள்ளனர். உலகின் மற்ற எல்லா நாடுகளிலுமிருந்து வரும் நல்லறிவை ஏற்றுக்கொள்ள அந்த மனச்சுவர் அவர்களைத் தடுக்கிறது. நேசத்தையும் நிறையன்பையும், நல்லுணர்வையும், அறமுறையினையும் மனத்தில் புகவொட்டாது தடை செய்கிறது அச்சுவர். உள்ளொன்றும் புறமொன்றுமாய்ப் பிரிக்கிறது பெருஞ்சுவர். கல்லாலும் மண்ணாலும் கணக்கற்ற மக்களாலும், நன்மை செய்வதற்காகக் கட்டினான் கொடுங்கோலன் 'ஷின்—ஹூவாங்' அன்றைய சீனப் பெருஞ்சுவரை. ஆதிக்க வெறியாலும், ஆணவத்தாலும் அன்பின்மையாலும் தீமை செய்வதற்காகவே கட்டியிருக்கிறார்கள் இந்தக் 'குடியரசுப் பிரியர்கள்' தங்கள் கொள்கைப் புதுப்பெருஞ்சுவரை.

மனத்தில் நல்லவற்றை வரவிடாது தடுக்கும் தடைச் சுவர், குடியரசில் நம்பிக்கையுள்ள ஒரு மக்கள் சமுதாயத்துக்குத் தேவையா? அப்படியானால் அந்தச் சுவர் தகரட்டும்! சீனக் குடியரசுத் தலைவர்களின் மனத்தில் ஆதிக்கவெறியை வளர்க்கும் தவறான கொள்கைக் கோட்டை உடையட்டும். அவர்களாகவே உடைத்துக்கொள்ளாவிட்டால் நாம் உடைப்போம்! சீனரின் கொள்கைக் கோட்டையை — சர்வாதிகாரம் — ஆதிக்கவெறி — என்னும் தடைச் சுவரைத் தாக்குவோம்! கொள்கைக் கோட்டையை இடிக்கக் குண்டுகள் தேவையில்லை! நாம் இதனை நன்கறிவோம்! எனினும் இருமுனைகளிலும் சீனருடன் பொருத நாம் தயார்!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஊருக்கு அனுப்பியுள்ளது என்று கருதி நிறைவடைந்தான்.

பார்ப்பதற்கு நல்ல அழகியதோற்றமும், இளமை வயதும், இனிய பேச்சினால் மாற்றுரைத் தன்பால் ஈர்க்கக்கூடிய திறனும், பேச்சழகும், மரியாதைப் பண்பும், பணிவுக் குணமும் பொருந்தி நின்ற வேலய்யன், தன் அண்ணனுடன் முதன முதலில் அந்த ஊருக்குப் பள்ளி திறக்கும் உத்தரவுடன் வந்து சேர்ந்தான். ஊரில் உள்ள பெரியவர்கள் மலர்ந்த முகத்துடன் அவர்களை வரவேற்றனர். வந்த காரணத்தை அறிந்து பெருமகிழ்வுகொண்டனர். ஊருக்குப் புறத்தே இருந்த ஒரு கட்டிடத்தை ஒழித்துக்கொடுத்து, பள்ளிக்கூடத்திற்கு வசதியைத் தேடித் தந்தனர். பள்ளியும் துவக்கப்பட்டது. ஊரிலிருந்த நாதசுரக்காரர், மேளக்காரர் இலவசமாக ஊதி மேளம்கொட்டினர். பெரியவர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளை அன்றே பள்ளியில் சேர்த்தனர். முதல்நாளிலேயே நூறு பிள்ளைகள் சேர்ந்ததைக்கண்டு, வேலய்யன் மகிழ்ச்சி கொண்டான். ஆனால், முதலில் கூச்சத்துடன் ஒதுங்கி நின்ற வேலய்யனை ஒரு பெரியவர், ''என்ன; வாத்தியாரய்யா, ஒதுங்கி நிற்கின்றீர். இதுவரையில் நாங்கள்மட்டுமே இந்தப் பிள்ளைகட்கு இறைவனாக இருந்துவருகிறோம். இன்றுமுதல்எங்கள் பிள்ளைகட்கெல்லாம் இன்னொரு இறைவன் வந்துவிட்டார். அது நீங்கள்தானய்யா. நீங்கள் எங்கள் பிள்ளைபோல. எங்கள் பிள்ளைகளைப் படிப்பில் நல்ல தேர்ச்சியடையச் செய்து முன்னுக்குக் கொண்டாருங்கள்'' என்று கூறித், தன் பக்கலிலழைத்து, சிரித்து நின்றார். வேலய்யனும் மகிழ்ந்து, அனைவருக்கும் வணக்கம் கூறிநின்றான். அவன் உள்ளம் அவர்களது அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றிகூறி நின்றது. வேலய்யனின் அண்ணாவும் மகிழ்ந்து, ''உங்கள் பிள்ளைபோல் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூறி விடைபெற்றுக்கொண்டார். வேலய்யனின் சிந்தையில் அந்தப் பெரியவர் கூறிய ''இறைவன்'' என்ற சொல் நின்று, அதன் உண்மையான உட்பொருளை உணர்த்தி உணர்த்தி ஒளியுடன் திகழச்செய்தது. அவன் வாய் அன்று முழுவதும் ''இறைவன்; தான் இறைவன்.'' என முணுமுணுத்து நின்றது. இறைவன் என்ற அக்கடலில் அவனது உள்ளம் மூழ்கி, சிந்தனை என்ற முயற்சியில் அறிவு என்ற வலியினைக் கொண்டு தூய்மையான நன்முத்துக்களையும், நற்பவழங்களையும் கண்டெடுத்து மகிழ்ந்துகொண்டிருந்தான்.

அன்பும்,ஆதரவும் இனிய பேச்சும் இதமான பண்பும் கொண்டு வேலய்யன் ஊராரிடையில் பழகினான். ஊராரும் வேலய்யனிடம் ஆசிரியருக்குரிய மதிப்பும் மரியாதையும் அளித்து, ஆதரித்து நின்றனர். நாளடைவில் வேலய்யன் அந்த ஊரில் முக்கியமான குடிமகன்போல விளங்கினான்.

ஒன்றுமுதல் ஐந்து வகுப்புகளைக் கொண்ட பள்ளியைத் திறம்பட வேலய்யன் நடத்திவந்தான். பள்ளி நேரம் என்பதை அவன் கண்டிப்பாகப் பின்பற்றி நிற்கும் பண்பை மேற்கொள்ளவில்லையாதலால், எல்லா வகுப்புப் பிள்ளைகளும் நன்றாகத் தங்கள் தங்கள் பாடங்களைப் படித்து வளர்ச்சி பெறுவதில் வாய்ப்பிருந்தது. மாலை ஐந்து மணிக்கு மேலும் வகுப்பு நடத்துவான். அவன் சம்பளத்துக்காக மட்டும் உழைக்கவில்லை. அன்பாகவும் இனிமையாகவும் நடந்து, பேசிப், பிள்ளைகளிடம் பழகினான். சிறுசிறு சித்திரங்கள் வரைந்தும், அழகிய இனிய பாடத் தொடர்பான பாடல்களை இயற்றி அபிநயத்துடனும் இசையுடனும் பாடச் செய்தும் பிள்ளைகட்கு உற்சாக மூட்டினான். சிறிய சிறிய கதைகளைக் கூறி மகிழ்ச்சியடையச் செய்தான். நல்ல பல பாடத்துணைப் பொருள்களைத் தயார் செய்தான். நாடகம் ஒன்றும் எழுதி, அதில் பயிற்சி கொடுத்து வந்தான். விளையாட்டிலேயே பாடங்களைப் புகட்ட ஆரம்பித்தான். பிள்ளைகளின் சிந்தனையை அவர்கள் அறியாமலேயே வளர்த்தான். அவர்களின் கேள்விகட்கு விடை கூறுவதில் முதலிடம் தந்தான். நிறைய ஐயப்பாட்டுக் கேள்விகளைக் கேட்கச் செய்வதிலும், உரிமையளித்தான். பள்ளியில் மட்டுமல்ல, வேலய்யன் வீடும் பள்ளியாயிற்று. இரவில் ஊரை வலம் வருவான் — பிள்ளைகள் படிக்கிறார்களா என்பதைக் கவனிக்க. ஏழைப் பிள்ளைகட்காகத் தன் ஊதியத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி அவர்கட்கு வேண்டியதை நிறை செய்தான். பிள்ளைகளின் கல்வித்தரம் நாளும் நாளும் செழிப்புறு பயிர்போல அழ காகவும் பயனுடையதாகவும் வளர்ச்சியடைந்தது.

இவ்வாறெல்லாம் உழைத்து வந்த வேலய்யன் ஊரில் நல்ல செல்வாக்கு அடைந்தான் என்று கூறவும் வேண்டுமா? ஊரிலிருந்த எட்டாவது படித்துமுடித்த வாலிபர்கள் வேலய்யனிடம் நெருங்கிப் பழகினர். மிக்க மரியாதைப் பண்புடன் அவர்களிடையே வேலய்யன் பழகிவந்தான். பழக்கம் நெருங்க நெருங்க, அவர்களிடம் தனது எண்ணத்தை வெளியிட்டான். ஊரில் 'திருவள்ளுவர் மன்றம்,' நடத்தவும், வாரம் ஒரு முறை திருக்குறள் வகுப்பு நடத்தவும், அதில் ஈடுபட்ட உறுப்பினர்கள் ஓய்ந்த நேரங்களில் இரவுப் பள்ளியில் சேர்ந்து ஊர் மக்கட்குக் கல்வி புகட்டுவதில் ஈடுபடவும், ஊரின் வளர்ச்சியில் கவனம் எடுத்து ஆவன செய்யும் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளவும், ஊரின் சுகாதாரக் கவனம், பாதை வசதி போன்ற சமுகத் தொண்டுகளிலீடுபடவும் ஆகிய தனது திட்டத்தை அவர்களிடம் வெளியிட்டான். அனைவரும் முகமலர்ச்சியுடன் இந்தத் திட்டத்தை வரவேற்றனர்.

திருவள்ளுவர் மன்றம் திருக்குறள் போதிப்பதோடு மட்டும் தன் பணியை நிறுத்திக்கொள்ளவில்லை. திருக்குறளில் காணப்படும் அரிய மனிதப் பண்பாட்டு நெறிகட்குக் கருத்துக் கருவூலங்களாகப் பண்டைத் தமிழர் வாழ்விலிருந்துபலப்பல எடுத்துக்காட்டுகள் காட்டுவதன் மூலம் தமிழ்ப் பற்றும், நாட்டுப் பற்றும் கொள்ள வழிகோலியது. நாட்டின் வலிமையான பாதுகாப்பு, அதன் பண்டை இலக்கியங்களே என்பதைத்தெள்ளத்தெளிய அறியத் திருவள்ளுவர் மன்றம் முயன்றது. 'நமக்கென்ன' என்று ஒதுங்கியிருந்த மனங்களை, 'நாம் இல்லாவிட்டால் பின் யார் வருவர்' என்று முன்வந்து தொண்டு செய்து முன்னேற்றத்திற்கு அடிகோல மன்றம் வழிகாட்டி நின்றது.

அரசியல் தெளிவையும், சமுதாயத்தின் நல்லபல கோட்பாடுகளையும், மனித வாழ்வின் அறத்தையும் பல வகையிலும் எடுத்துப் புகட்டுவதோடுநின்றுவிடாமல்,செயல் முறையில் செயல்பட வழிகோலியதால், ஊரில் பலமுன்னேற்றங்கள் ஏற்படலாயின. முன்னிலும் மிக உற்சாகமாகப் பிள்ளைகள் பள்ளிக்கு வர ஆரம்பித்தனர். பள்ளிக் கட்டிடம்

பெரிதாக்கப்பட்டது. வேறொரு ஆசிரியரும் அமர்த்தப்பட்டார். குழாய்நீர் போடப்பட்டுக் குடிதண்ணீருக்கு வசதி ஏற்பட்டது. போக்குவரத்துக்குப் பாதை நன்றாகப் போடப்பட்டது. நல்லதொரு நூல் நிலையம் அமைக்கப்பட்டுப், படிப்பகத்தில் பலவிதச் செய்தித் தாள்கள் வரவழைக்கப்பட்டன.

மக்களை நம்பினால் எதையும் செய்து காட்டமுடியும் என்பது நிரூபிக்கப்பட்டது. சமுதாயத்திற்கு நல்ல மதிப்பளித்து, நல்ல குறிக்கோளை முன்வைத்துப் பொதுத் தொண்டில் ஈடுபட்டால், நம்மை அது உயர்த்தியே தீரும். நல்ல ஆசிரியர் எனப்படுபவர் அரசியலுக்கு விரோதமில்லாமல், பிள்ளைகட்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கே ஆசானாக உயரவியலும். நிகழ் காலத்துக்கு ஆசானாக இருப்பதோடு, வருங்கால உருவத்துக்கு வண்ணம் கொடுக்கும் ஓவியனாகவும் விளங்கமுடியும் என்பதை வேலய்யன் முன்மாதிரியாக நின்று எடுத்துக்காட்டினான் என்று கூறுவதில் மிகையொன்றுமில்லை.

✲

அன்று வந்த செய்தி வேலய்யன் வாழ்வில் ஒரு திருப்பம் உண்டாவதற்கு ஒரு அடிப்படையாக அமைந்தது. ஆம், அவன் அண்ணன் இறந்துவிட்டார். அவனும், அவனுடைய தங்கை மல்லிகாவும் இனி உலகில் தனியாக விடப்பட்டனர். விம்முதல் பெருக்கெடுத்தது. இதயம் குலுங்க அழுதான். இந்தப் பெருந் துன்பத்தை வேலய்யனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கடுங் காய்ச்சலில் விழுந்தான். தனது அன்புத் தங்கையின் மனம் துன்பப்படக் கூடாதே எனத் தன்நோயைத் தெரிவிக்காமலிருந்துவிட்டான்.

அந்தச் சிற்றூரில் முனுசாமி என்பவர் கொஞ்சம் நிலபுலனுடன், செல்வாக்குடன் வாழ்ந்து வந்தார். அவருடைய மகள் பெயர் பொன்னி. அழகிலும் அதற்கேற்ற அறிவிலும் பொன்னெனத் திகழ்பவள் பொன்னி. தன் செல்லமான ஒரே மகளைப் பட்டணத்துக்கனுப்பி வைத்துப் பத்தாவது வரை படிக்க வைத்தார். பொன்னியும் வளரும் கொடிபோன்று தந்தையின் அன்பையும், எண்ணத்தையும் அறிந்து, பத்தாவது வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் வாங்கித் தேர்ச்சி பெற்றாள். தேர்வு முடிந்து ஊருக்கு வந்த பொன்னி, வேலய்யனின் உழைப்பையும், தொண்டினையும், அவனால் அந்த ஊர் அடைந்துள்ள முன்னேற்றத்தின் வளர்ச்சியையும் தன் தந்தை வாயாலேயே புகழ்ந்து உரைத்ததை ஆவலுடன் கேட்டாள். அத்தகைய பெருந்தகையைக் கண்டுபேசவேண்டும் என்னும் பெரு ஆவல் கொண்டாள். பழம், பலகாரங்களுடன் வேலய்யனைக் கண்டு பேசத், தன் தந்தையுடன் பொன்னி சென்றாள். தந்தை தன் மகளை வேலய்யனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்கள் காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும் தன் உள்ளம் கனிந்த நன்றியை வேலய்யன் தெரிவித்துக்கொண்டான். தன் தந்தை கூறியதைவிடச் சிறந்த பண்புகள் வேலய்யனிடம் ஒளிர்வதைக் கண்டு பொன்னி வியப்புற்று, மகிழ்ந்தாள்.

பொன்னியின் மூலம் வேலய்யன் பள்ளி நடைமுறை வளர்ச்சியில் பல காரியங்களைச் சாதித்துக் கொண்டான். அபிநயத்துடன் பாடல்களைப் பாடல், கும்மி, கோலாட்டம், சிறு சிறு நடனம் இவற்றைக் கற்பிப்பதில் பொன்னியின் உதவி வேலய்யனுக்கு மிகச் சிறப்பாக இருந்தது. பொன்னி வேலய்யனுக்கு இந்த வகைகளில் உதவி புரிவதில் மிகுந்த மனநிறைவு கொண்டாள். நமது பிள்ளைகட்குத் தானே இதனால் நன்மை என்ற எண்ணத்தினால் ஊர்ப் பெரியவர்களோ, முனுசாமியோ இதைப்பற்றித் தடையாக ஒன்றும் கூறவில்லை. கலையும் கல்வியும் எங்கிருந்தால் என்ன? அதன் வளர்ச்சிக்குச் சட்டமிட்டுத் தளை போடுவதால் என்ன பயன்? அதனால் தீமைதான் உண்டாகும்.

திருவள்ளுவர் மன்றத்தில் பொன்னியும் ஓர் உறுப்பினராகச் சேர்ந்தாள், ஆரம்பத்தில் வேலய்யனுக்கு இது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. என்றாலும், எப்படி எதிர்த்துக் கூறுவது என்பதால், மன்றத்துக்கே அப்பொறுப்பை விட்டுவிட்டான். மன்றத்தினரும் இதுபற்றி ஒன்றும் கூறவில்லை. சிறு கிராமத்தில், கல்வியறிவு அதிகமாகப் பரவாத இடத்தில். ஒரே ஒரு பெண் மட்டும் மன்றத்தில் சேர்வதால், பின் விளைவு ஒருவேளை தீமையாக இருந்துவிட்டால் ......அதன் பயனாக மன்றத்துக்கே அழிவு வரக் காரணமாக அது இருந்துவிட்டால்...... இப்படிப்பட்ட எண்ணங்களே, வேலய்யனுக்கு, மன்றத்தில் பொன்னி ஓர் உறுப்பினர் என்ற நிலைக்குத் தயக்கம் காண்பிக்க வேண்டிய நிலையுண்டாகியது.

மன்றத்தின் நடைமுறைபற்றியும், பள்ளியின் தொடர்பாகவும் வேலய்யனும், பொன்னியும் சந்தித்துப் பேசிடும் வாய்ப்புகள் பல நேர்ந்தன. சிற்சில சமயங்களில் அரசியலைப் பற்றிக்கூட விவாதிப்பர். நேரம் போவதே தெரியாது — விவாதம் தொடங்கிவிட்டால். இவை போலும் வாய்ப்புகளில், வேலய்யனின் வாதிக்கும் திறமையையும், அறிவுத் திண்மையையும், அதன் ஆழத்தையும், தன் கருத்தை நிலைநாட்டி எதிரியின் மனத்தை ஒத்துக்கொள்ளச் செய்யும் முறையில் நயமான வழியில் தன் விவாதத்தைக் கொண்டுசெல்லும் முறையையும், அழகிய ஆற்று நடைபோன்ற பேச்சையும் கண்டு, பொன்னி, அச்சம் கலந்த மரியாதையும் மதிப்பும் விளங்கத், தன் மனத்தில் வேலய்யனைப்பற்றிய பற்பல சிந்தனைகளை அசை போடுவாள்.

சமுகத்தில் நல்ல பெயர் வாங்குவது என்றால், முட் செடியினின்றும் மலரைப் பறிப்பதைப் போலத்தான். சிறிது கவனம் தவறினாலும், சமுகத்தின் கூரிய முட்கள் உடம்பைக் கீறிக் குருதியை — வரவழைக்கத் தயங்காது. அதற்காகப் பின்வாங்கி, மலரைப் பறிக்காமல் விட்டுவிடுவதும் நல்லதல்ல அல்லவா?

இளமைப் பருவத்தினர் அடிக்கடி சந்தித்து உரையாடுவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பொன்னியும் வேலய்யனும் எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டனர். சாதாரணமாகக் கண்டு பேசுவதில் என்ன தவறு என்று மட்டுமே எண்ணினர். உண்மையில், ஒருநாளும் பொன்னியும் வேலய்யனும் தங்கள் நட்பில் புதிய உறவு ஏதும் உண்டாகக்கூடிய வழியிலும் நட்பை வளர்க்கவில்லை. திடீரென்று தோன்றும் காதலும் அவர்களிடை ஏற்படவில்லை. ஆனால், ஏனோ சமுகத்தில் சந்தேகத்தின் அலைகள் எழும்ப ஆரம்பித்தன. அவரவர்களும் தங்கள் தங்கள் கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு, உன்னிப்பாகப் பார்க்கத் தொடங்கிவிட்டனர். அப்பாவி வேலய்யனுக்கு இதெல்லாம் தெரியாது. எரியும் தீக்கு எண்ணெய் வார்ப்பதுபோல, பொன்னியைத் திருமணம் செய்துகொள்ளவேண்டிய உறவுரிமை பெற்றிருந்த முத்துசாமி வேலய்யனைப்பற்றிப் பல வதந்திகளைக் கிளப்பிவிட ஆரம்பித்தான். பாசி போன்றது சந்தேக நோய். அது இன்னும் வலுவாகப் படர ஆரம்பித்தது. இதற்கிடையில்

தான், வேலய்யன் தன் அண்ணனின் பிரிவுத் துயர் தாங்கமாட்டாது கடுங் காய்ச்சலில் வீழ்ந்தான்.

பொன்னி வேலய்யனுக்கு மருந்து கொடுப்பது, கஞ்சிகாய்ச்சிக்கொடுப்பது போன்ற மருத்துவம் செய்தாள். முனுசாமியும் தன் ஒரே மகளைக் கடிந்துகொண்டால் அவளுடைய மனம் புண்படுமே என்று அஞ்சி, என்ன செய்வது என்ற திகைப்பிலிருந்தார். ஊருக்காக உழைத்து வரும் ஒருவர் படுக்கையில் கிடக்கும் போது, சும்மா இருப்பது அறமாகுமா என்ற எண்ணம் உந்த, வருவது வரட்டும் என்று துணிந்து, பொன்னி வேலய்யனுக்கு மருத்துவம் பார்த்தாள். தன் தங்கைக்குத் தெரிவித்தால் அவள் துன்பமடைவாளே என்பதால், வேலய்யன் தன் உடல்நலக் கேட்டைத் தெரிவிக்கவில்லை.

✲

அன்று வேலய்யனுக்குக் காய்ச்சல் கடுமையாகி, மயக்கத்துடன் கிடந்தான். பொன்னியின் முகத்தில் துன்பச் சுமையிறங்கிக், கருகியிருந்தது. சுயநலமற்ற இளமைத் தொண்டர் இந்நிலையிலிருக்கின்ற இரக்கத்தை எண்ணியபோது, தன் கண்ணீரைப் பொன்னி அடக்க முடியாமல்அழுதுகொண்டிருந்தாள். மனத்தில் எழுந்த கருணையினுலும், அன்பின் இரக்கத்தினுலும், அவனது நெற்றியில் கைவைத்தபடி, முகத்தை உற்றுப் பார்த்தபடி அருகில் அமர்ந்துகொண்டிருந்தாள்.

முத்துசாமி முனுசாமியை அழைத்து வந்து இந்த நிலையை நேருக்கு நேர் காண்பித்தான். அவர் சந்தேகத்திலுழன்று கொண்டிருந்தவராதலால், பொன்னி இருந்த நிலை மேலும் சந்தேகம் உறுதிபடக் காரணமாகக் கொதிப்படைந்தார். கோபத்துடன், 'பொன்னி, வீட்டுக்கு வா' என இரைந்தார். பொன்னி நடுங்கினள். சிறிது நேரத்திற்கெல்லாம் மயக்கம் தெளிந்த வேலய்யன் நிலையைப் புரிந்துகொண்டான். முனுசாமியிடம் உண்மையைக் கூறிப் பொன்னிக்கு விடை கொடுத்தனுப்பி வைத்தான்.

இந்த அளவுக்குத் தன் வாழ்வில் களங்கம் கற்பிக்கும் நிலைக்கு வந்த பிறகுகூட, அந்த ஊரில் இருப்பது நியாயமல்ல என்பதை வேலய்யன் உணர்ந்தான். மாற்றல் கேட்டான். மேலிடம் மறுத்துவிட்டது. எனவே வேலை விலகல் தந்துவிட்டான்.

முனுசாமியிடமும், ஊராரிடமும் விடை பெற்றுக்கொண்டு, தன் ஊருக்குப் புறப்பட்டான். வெயில் வெளியில்தான் கடுமையாக இருந்தது. அவனது அகத்தில் இதைவிட வெந்தழல் கொதித்துக்கொண்டிருந்தது. எதையும் நின்று நிதானித்து முடிவுக்கு வரத் தயங்கியதால், இந்தச் சமுதாயத்தால் எத்தனை மாபெரும் அறிவுலகச் சிற்பிகள், தொண்டுநல ஊழியர்கள் பாழாக்கப்பட்டுள்ளனர்! பற்பலவாறு சிந்தனையைப் பறக்கவிட்டுக் கொண்டு நடந்துகொண்டேயிருந்தான்.

கண்களிலிருந்து பெருகி வரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு உறுதியான குரலில், பொன்னி, தன் முடிவைத் தெரியப்படுத்தினுள். திருமணம் வேண்டாம் என்ற தனது முடிவைப் பொன்னி தந்தையிடம் தெரிவிக்கும்போது, தன் குரலில் மிக உறுதியை வைரம்போல் வரவழைத்துக்கொண்டு, நடுக்கமுருது கூறி நின்றதைக் கண்ட தந்தை திகைத்து நின்ருர்.

ஒருவிதமான களங்க எண்ணமோ, நடத்தையோ இல்லாத, இந்த ஊருக்குப் பலவகையாலும் நன்மைகள் புரிந்த ஓர் உத்தமரை நல்ல தெளிவுடன் உணர்ந்துகொள்ளும் ஆற்றல்இன்றி, வீண் பழியாகக் களங்கத்தைச் சுமத்தித் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்ட தனது ஊரை, பொன்னி, வெறுத்தாள். உண்மையைத் தனது தந்தை உணர்கின்ற நாள் வரும் வரையில், தான் திருமணமே இல்லாமலிருப்பது எனப் பொன்னி தனக்குத்தானே முடிவெடுத்துக்கொண்டாள்.

முனுசாமி அன்று பட்டினப்பக்கம் வந்தார். சில பொருள்களை வாங்க வந்த அவருக்குத் திடீரென்று காய்ச்சல் ஏற்பட்டது. வெகு விரைவில் காய்ச்சல்அதிகமாகி, அடியெடுத்து நடக்க முடியாதவாறு ஆகிவிட்டது. எனவே, அந்த ஊரில் தனக்குத் தெரிந்த ஒரே ஒரு ஆள் வேலய்யன். அவர் வீட்டில் தங்கி, மறுநாள் காலை ஊர்போய்ச் சேர்ந்துவிடுவோம் என்று எண்ணினர். மாட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு, மெள்ள வேலய்யன் வீடு வந்து சேர்ந்தார். எதிர்பாராத வகையில் முனுசாமி தனது வீட்டிற்கு வந்ததைக்கண்டு, வேலய்யன் மகிழ்ச்சியும் வியப்பும்கொண்டான்.

மருத்துவர் ஒருவரை அழைத்து வந்து காண்பித்தான். மருத்துவர் ஒருமாதம் இங்கேயே தங்கவேண்டும் என்றும், வந்திருப்பது கடுமையான 'டைபாயிடு' என்றும் கூறி, உரிய மருந்தைக் கொடுத்துவிட்டுச் சென்ருர். தன் நினைவின்றியிருந்த முனுசாமி, நினைவுவந்தபிறகு, இதனைக்கேட்டு, மிகவும் துயரடைந்தார். அண்ணன்மூலம் யாரெனத் தெரிந்துகொண்ட மல்லிகா, தகுந்த மருத்துவம் செய்வதில் முனையலானுள்.

மறுநாள், வேலய்யன் பொன்னிக்குத் தெரிவித்துவிடுகின்றேன் என்ருன். ஆனுல், படுக்கையிலிருந்த முனுசாமி முதலில் உடன்படத் தயங்கினுர் என்ருலும், பின்பு சரி, 'தெரிவித்துவிடு' என்ருர். பொன்னி மணமாகாத பெண்; ஏற்கனவே வீண் சந்தேகத்திற்கிடமான பெண்; இந்நிலையில் இங்கு வரவழைப்பது நல்லதல்ல என்று எண்ணிய வேலய்யன், தந்தை தனது வீட்டில்தானுள்ளார்; வருவதற்குச் சிறிது காலமாகும் என்றுமட்டுமே தெரிவித்தான்.

✲

வேலய்யன் அரசாங்கப்பணிமனை ஒன்றில் ஊழியம் புரிந்துவந்தான். நாள்தோறும் மருத்துவர் வருவதும், பார்ப்பதும், மருந்து தருவதும் நடைபெற்றன. மல்லிகாவின் மிகுந்த கவனிப்பினுலும், வேலய்யனின் அன்புக் கவனிப்பினுலும் முனுசாமியின் உடல் தேறிவந்தது. இதற்கிடையில்தான் அவர் உண்மையை உணரக்கூடிய அந்த நிகழ்ச்சி நடந்தது.

அன்றுஒருநாள் முனுசாமி தீவிரச் சிந்தனையிலாழ்ந்திருந்தார். வேலய்யன் தெரிவித்தும், தன் மகள்—பொன்னி வரவில்லையே என்பது தான் அவருடைய கவலைக்குக் காரணமாயிருந்தது. தீவிர எண்ணமானது அவருடைய பலவீனஉடலை வெகுவாகப் பாதித்தது. திடீரென்று நினைவின்றி மூர்ச்சையானுர். வேலய்யனும் வீட்டில் இல்லை. பதைபதைப்பும் திகிலும் கொண்ட மல்லிகா, உடனே அண்ணனுக்குச் சொல்லியனுப்பிவிட்டு, அவர் மயக்கத்தைத் தெளிவிக்க ஆரம்பித்தாள். பழச்சாற்றை அவருக்குக் கொடுத்துப் பருகச்செய்யலானுள். ஆனுல் அவர் மிகவும் பலவீனமடைந்திருந்தார். வழியொன்றும் தெரியவில்லை. சட்டென்று மல்லிகா கீழே உட்கார்ந்துகொண்டு, அவர் தலையைத் தனது மடியில்வைத்துக் கொண்டு, பழச்சாற்றைச் சிறிது

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

சிறிது தேக்கரண்டிமூலம் வாயில் விட்டாள். அதற்குள் வேலய்யனும் வீட்டிற்கு வந்துவிட்டான். பழச்சாறு உள்ளே செல்லச் செல்ல. மயக்கம் தெளிந்து, கண்களை விழித்தார். விழித்த அவர் தனது தலை மல்லிகாவின் மடியில் கிடப்பதையும், வேலய்யன் அருகிருந்து கவலை முகத்தோடு நோக்குவதையும் கண்டார். அவசர அவசரமாகத் தன் தலையை நகர்த்திக்கொள்ள முயன்ருர். ஆனல், பெருந்தன்மையே உருவான வேலய்யன் "அப்படியே அமைதியுடனிருங்கள்; பழச்சாறு பருகுங்கள்" என்ருன். அவனது சொற்கள் அவரது இதயத்தை இளகச்செய்தது. இதே நிலையில் அன்ருெரு நாள் வேலய்யன், தன் மகள் இருந்தகாட்சியும் அதுபோது தான் நடந்துகொண்ட விதமும், பேசிய பேச்சும் நினைவுக்கண் எழுந்து நின்றது. விழிகளில் நீர் பெருக்கெடுத்தது.

மருத்துவரின் திறமைமிக்க மருத்துவமும், வேலய்யனின் ஆதரவும், மல்லிகாவின் உபசரிப்பும் சேர்ந்து, முனுசாமியின் உடல்நலத்தை மீட்டு வந்தன. மறுபிறவியைத் தந்தது போல வேலய்யன் தன்னைக் காப்பாற்றிய உதவிக்குணத்தைக்கண்ட அவர், விடைபெற்றுக்கொண்டு ஊருக்குக் கிளம்பலாஞர். பொன்னிக்கு உடல்நலக் கேட்டைப்பற்றித் தெரியப்படுத்தவில்லை என்பதையும், அதன் காரணத்தையும் கூறி, இதுவரை இதைச் சொல்லாமலிருந்ததற்காகத் தன்னை மன்னிக்கும்படியும் வேலய்யன் அவரிடம் கேட்டுக்கொண்டான்.

வேலய்யன் மன்னிப்புக்கேட்டது அவரது உள்ளத்தை வெகுவாகப் பாதித்துவிட்டது. "நானல்லவா உன்னிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். வீண்சந்தேகம்கொண்டு, நினைவற்ற நிலையில் என் பெண் பொன்னி, உன்னைத் தொட்டு மருத்துவம் பார்த்ததைத் தவருன கண்ணேடு நோக்கிவிட்டேன். உன்னை வெறுத்தேன். அன்பும் பண்பும் கொண்ட உன்னையுணரத் தவறிவிட்டேன். எதையும் ஆழமாக எண்ணிப் பார்க்காமல், அகலமாகவே எண்ணி, விரைவில் ஒரு முடிவுக்கு வந்ததன் பலனே இது. பொன்னியும் அதிலிருந்து திருமணமே செய்துகொள்ள முடியாது என மறுத்துக்கொண்டு வருகின்ருள். உன் மன்னிப்பு எனக்குக் கிடைக்க வேண்டும்; உண்மையை உணர வேண்டும். பிறகே திருமணப்பேச்சு என்று அவள் கூறிவருகின்ருள். அதை அலட்சியமாக எண்ணினேன். இன்று என் கண்கள் திறந்துகொண்டன. உண்மை என்றும் வெல்லும் என்பதை உணர்ந்துகொண்டேன். பொன்னியின் திருமணத்திற்குத் தவருமல் வரவேண்டும்" என்று, வேலய்யனிடம் மன்னிப்புவேண்டி நின்ருர்.

ஆம், இறுதியில் உண்மை வென்றது! பொய்ம்மை பூண்ட சந்தேக வேடம் கலைந்தது!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

அருமை நண்பா! நடந்ததைக் கூறினேன்; நடக்கப் போவதையும் கூறுகிறேன், கவனமாய்க் கேள்— கருத்தில் பதித்து வைத்துக்கொள். நாடு காக்கும் நற்பணிக்கு என்னை நான் அர்ப்பணித்துக்கொண்டேன். இதைவிட ஒரு மனிதன் உலகில் உயர்ந்த செயலென்று வேறெதைச் செய்யமுடியும்? கேடு களைவது திண்ணம் — நாடு மீட்பது உறுதி. இதனை எண்ணும்பொழுது இதயம் அமைதியடைகிறது— ஆனந்தங் கூடக் கொள்கிறது.

ஆனல், என் இளம் மனைவி...... என்னல் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. நான் செய்தது தியாகந்தானு? என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். ஆனல், விடை கிடைக்கவில்லை உலகமே அதற்கு ஏற்ற பதில் அளிக்கட்டும்.

'நாடு வாழ நான்; என் வீடு வாழ நீ' அதிர்ச்சியடையாதே நண்பா!— ஆழ்ந்து சிந்தி. வாழ்க்கையின் முடிவில் உள்ள நான் எப்படி வாழ்க்கையைத் தொடங்குவதற்குத் துணை செய்ய முடியும்? மலர்ந்த மலர் சருகாகு முன் அது பயன்படாமல்- பயன்படுத்தப்படாமல் போவது அநீதி அல்லவா? பிறந்தவன் இறக்கத்தான் வேண்டும். ஆனல், பிறந்தவுடன் இறந்துவிட்டால் விளையும் பயன்தான் என்ன?

நண்பா! மேலும் என்னல் எழுத முடியவில்லை. நேற்றுவரை பெயரளவில் என் மனைவியாக இருந்த "அவள்" இன்று முதல் உன் இல்லாளாக—உடைமையாக — உரிமையாக ஆகட்டும். அவள் இளமை நினைவுகள் நிறைவேறட்டும்—எதிர்கால எழில் வாழ்வு மலரட்டும். நண்பனின் கடைசிக் கோரிக்கை—நல்ல இதயத்தின் இறுதி வேண்டுகோளை நிறைவேற்றுவாயா? 'நீ செய்தது தியாகமா' என்று என் மனச்சான்று எதிர்க் கேள்வி போடுகிறது. அந்த வினவிற்கு "ஆம்" என்ற விடையளிக்கவும், என் தியாகம் முழுமை பெறச் செய்யவும் உன் உதவி தேவையென்று கருதியே தாழ்மையுடன் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

மனக்கண் முன் என் எண்ணங்களை நிறுத்திப் பார்க்கிறேன்— மகிழ்வு பொங்குகிறது. அந்த மகிழ்ச்சி நிரந்தரமாக நின்று நிலை பெற நீ காரணமாக ஆகிவிட்டதாகவே நம்புகிறேன் — நம்பிக்கை வலுப்பெறட்டும். "நீடு வாழ்க நீவிரிருவரும்" என வாழ்த்துகிறேன்.

என்றும் உன் நண்பன்

தங்கராசன்.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.